வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 20.08.2022 சனிக்கிழமை | இதழ் : 256 | பக்கங்கள் : 16

## ஐ. நா. மனித உரிமை கூட்டம் இலங்கைக்கு சவால் இல்லை!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 20

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத் தொடர் இலங்கைக்கு ஒரு போதும் சவாலாகவோ, ஆபத்தாகவோ அமையாது என்று கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், செப்ரெம்பரில் நடக்கவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை இலங்கை விவகாரங்களை விசேட குழு ஒன்று கையாளும், அதேசமயம், இலங்கையின் நிலைப்பாட்டை அறிக்கை மூலம் வெளிவிவகார அமைச்சர் தெரியப்படுத்துவார் என்றும் அவர் கூறினார்.

6 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 316 தனி

15



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் 18ஆம் நாளான கார்த்திகை திருவிழாவான நேற்று கந்தப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக முத்துச்சப் பரத்தில் ஏறி பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சி...!

# ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தம் இந்த மாதம் கைச்சாத்தாகும்!

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 20

இந்த மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) ஊழியர்மட்ட உடன்படிக்கை சாதகமாக நிறைவேறும் என்று இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

15

## தேசியப் பட்டியல் மூலம் எம். பியாகும் கோட்டாபய

### பதவி துறக்கிறார் சீதா அரம்பேபொல

கொழும்பு, ஓக. 20

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் நாடு திரும்புகிறார். நாடு திரும்பும் அவர் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகவும், வெளிநாட்டு பயணங்களுக்கு தேவையான இராஜதந்திர அந்தஸ்தைப் பெறுவதற்காகவும் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட

15

## பல்கலை. அனுமதிக்கு தே. அ. அட்டை கட்டாயம்!

கொழும்பு, ஓக. 20

இந்த ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது, தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு

15

## டெங்கு நோய் தாக்கம் வடக்கில் அதிகரிப்பு!

### யாழில் இதுவரை எண்மர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 20

டெங்கு நோயின் தாக்கம் வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வருகின்றது என்று எச்சரித்துள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன், இந்த நோயால் இந்த ஆண்டில் இதுவரை 8 பேர் உயிரிழந்தனர் என்றும் கூறியுள்ளார்.

மேலும், இதுவரை வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 772 பேர் நோய்

15

## இலங்கைக்கான அவசர உதவியை அதிகரிக்கின்றது அவுஸ்திரேலியா!

கொழும்பு, ஓக. 20

இலங்கைக்கான அவசர உதவித் தொகையை 75 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களாக அதிகரிக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இலங்கைக்கு மேலதிகமாக 25 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை நன்கொடையாக வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

## ஐ. நா. சபையின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஓக. 20

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட செயலரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக்

15

## ஜனாதிபதியை சந்தித்தனர் பாதுகாப்புப் பிரதானிகள்!

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் இடம்பெற்ற

15

## கோட்டா நாடு திரும்புவது பற்றி எனக்கு எந்த தகவலும் தெரியாது

### கைவிரிக்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஓக. 20

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு திரும்புவது குறித்து தனக்கு தெரியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

15

## இலங்கைக்கு உதவும்போது நிபந்தனைகள் அவசியம்!

### சர்வதேசத்தை கோருகிறார் கர்தினால்

கொழும்பு, ஓக. 20

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நேர்மை மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை பாதுகாப்பதற்காக இலங்கைக்கு உதவிகளை வழங்கும்போது சர்வதேச சமூகம் நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்

15

## வார இறுதி நாட்களிலும் மின்வெட்டு

கொழும்பு, ஓக. 20

இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் 3 மணி நேர மின்வெட்டு நடைமுறையாகும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி,

15

## இவ்வருடம் மட்டும் 3.8 பில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது இந்திய அரசு!

### வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

பாங்கொக், ஓக. 20

“இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றது.”

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இவ்வருடம் மட்டும் இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

தாய்லாந்தில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் ‘இந்தோ - பசிபிக் பற்றிய இந்தியாவின் பார்வை’ என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றிய பின்னர் தொடர்ச்சி யான கேள்விகளுக்குச் ஜெய்சங்கர் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பற்றி ஒருதடவை விடு தலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சொன் னது பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ரணில் இப்போது சாம- தான- தண்டத்தை பயன்படுத்தி தன்னை நிலைநிறுத்துவதில் வெற்றியடைந்து கொண்டிருக் கின்றார் என்றே தெரிகின்றது.

ஜனாதிபதியாக அடுத்த இரண்டரை வருடங்களை நிச் சயப்படுத்திக் கொண்டதும், அவரின் கவனம் இப்போது அடுத்த தேர்தலை இலக்கு வைத்து நகர்ந்துகொண்டிருக் கின்றது.

சர்வகட்சி அரசு ஒன்றுக்கான அழைப்பை அவர் விடுத்த போதே, இது சாத்தியமாகப் போவதில்லை என்பது அவருக் குத் தெரியாததல்ல. ஆனால், அதனை எதிர்க்கவும் முடியாத இக்கட்டான நிலையில் கட்சிகள் நெளிந்தபோதும் - அதனை ஏற்றுக்கொண்டாலும் அதில் இடம்பெற அவை விரும்பவில்லை.

இதுவும் அவர் முன்கூட்டியே கணக்குப்போட்டுப் பார்த்து கணித்ததுதான்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு. ஆனால், அதில் இடம்பெறுவ தில்லை என்று முடிவெடுக்கும் என்பதும் முன்னரே தெரிந் ததுதான்.

அது, இப்படியொரு முடிவெடுத்தால் அதிலிருந்து பலர் வெளியே வருவார்கள் என்பதும் ரணில் அறியாதது அல்ல.

தன்னை தனிமனிதனாக மாற்றிய அந்தக் கட்சியிலிருந்து பலரும் இப்போது அரசில் (ரணிலுடன்) இணைய ஆயத்த மாவதால், அந்தக் கட்சியும் இப்போது சஜித் என்ற தனி மனிதருக்கான கட்சியாக மாறிக் கொண்டிருக்கின்றது.

இதேபோல, மலையகத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் இ. தொ. காவும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் சர்வகட்சி என்ற பெயரில் ஒரே முகாமில் சங்கமமானால் அவர்களின் உள்ளூர் அரசியலும் இடறுப்படவேண்டிவரும். இதனால், அவர்களும் சர்வகட்சி அரசாங்கத்தில் இடம்பெறுவதா இல் லையா என்பதில் உள்ளுக்குள் மோதிக்கொண்டிருக்கின்றனர்.

புதிய அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஜீவன் தொண்டமான் பதவியேற்பது உறுதி யாகிவிட்ட நிலையில், அடுத்த இரண்டு ஆண்டுகளும் சஜித்தின் எதிரணியில் அமர்ந்திருப்பது தமது அரசியலுக்கு ஆபத்தாகிவிடும் என்பது திகாம்பரத்தின் கணக்கு. இதனால், அவரும் அமைச்சராவது பற்றி யோசிக்கத் தொடங்கிவிட் டார் என்று தெரிகின்றது.

இதனால்தான் அந்தக் கூட்டணியில் உள்ள மலையக மக்கள் முன்னணி, அமைச்சரவையில் இடம்பெறுவதில்லை என்று முடிவெடுத்ததுடன், திகாம்பரமோ, மனோ கணே சனோ அமைச்சரானால் அந்தக் கூட்டணியிலிருந்து வெளி யேறப் போவதாக சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

இந்த நெருக்கடியிலிருந்து வெளியேவர மனோ கணேசன் புதிய கோரிக்கை ஒன்றை ரணிலிடம் முன்வைத்திருக்கிறா ரெனத் தெரிகின்றது.

ரணில் அமைக்கவிருப்பதாகத் தெரிவித்திருக்கும் புலம் பெயர்ந்தோர் விவகார அலுவலகத்தின் நிர்வாகப் பொறுப்பை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரியிருக்கிறாராம் மனோ கணேசன்.

ஓர் அமைச்சருக்குரிய அதிகாரங்களுடன் இந்த அலுவல கத்தை நிர்வகிப்பது நாட்டுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது மனோவின் கருத்து. அதற்கு அவர் பொருத்தமான வரும்கூட.

இப்படியே, சர்வகட்சி அரசு என்ற போர்வையில் ஒவ் வொரு கட்சிகளையும் சிதைக்கத் தொடங்கியிருக்கிறார் ரணில் என்கின்றனர் அவரைத் தெரிந்தவர்கள்.

அதனால்தான் முன்னர் அமைச்சரவையில் சேர்வதில்லை என்ற முடிவுடன் இருந்த சுதந்திரக் கட்சி இப்போது அரசாங் கத்தில் சேர்வதற்கு முடிவெடுத்துள்ளது. அவ்வாறு செய்ய வில்லை என்றால் தமது கட்சியிலிருந்து பலர் வெளியேறி விடுவர் என்ற பயம்தான் இதற்கு காரணம் என்கின்றனர் விசயமறிந்தவர்கள்.

சர்வகட்சி அரசு இப்போது சாத்தியமில்லை என்பதால், அரசுடன் இணைகின்றவர்கள் எல்லோரையும் இணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கமாக நடையைக் கட்ட தயாராகி வருகிறார் ஜனாதிபதி.

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு, ஐக்கிய தேசியக் கட்சி யிலிருந்து கரு ஜெயசூரிய தலைமையில் சுமார் பதினெட்டுப் பேர் மகிந்தவுடன் இணைந்து ஆட்சியமைத்ததுபோல, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இருபது பேருடனும் மற்றைய சிறிய சிறிய கட்சிகளுடனும் இணைந்து இப்போது தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தயாராகி வருகிறார் ஜனாதி பதி.

இந்த வார இறுதிக்குள் புதிய அமைச்சரவை அமைக்கப் பட்டுவிடும் என்கின்றன ஜனாதிபதியுடன் நெருக்கமான வட் டாரங்கள்.

- ஊர்க்குருவி.

# அரச அதிகாரிகளுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு திட்டம் விரிவடையும்!

கொழும்பு, ஓக. 20

அரச அதிகாரிகளின் வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் பரிந்துரை திட்டத்தை விரிவுப் படுத்துவது தொடர்பில் அர சாங்கம் கவனம் செலுத்து வதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி அரசதுறை பணி யாளர்களை உற்பத்தி ரீதியான பணிகளில் ஈடுபடுத்தல், இதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகரித்தல் குறித்த திட்டங் கள் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக சுற்றறிக்கை திருத்தத்தின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெறும் அரச பணியாளர்களுக்கு, குடி யுரிமை இல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது ரூபாய் கணக்கில் பணத்தை அனுப்ப முறையான ஒப்புதல் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம், மூன்று மாதங் களுக்கு ஒரு முறையாவது பணத்தை இலங்கைக்கு அனுப் புவதை உறுதிப்படுத்துவது டன், வேலைவாய்ப்புக்கு விண் ணப்பித்த அரசாங்க ஊழியர்க ளுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை விரைவாக கண்டறிவதற்கும் வழியேற் படுத்தப்படவுள்ளது.

அதேநேரம்,வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குச் செல்லும் அரச ஊழியர்களுக்கு விடுப்பு பெறுவதற்கான விண்ணப்பங் களை அனுப்புவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் வங்கிக் கடன்கள் மற்றும் ஓய்வூதியப் பங்களிப்பு களை பெற்றுக்கொடுக்கப்படு வதை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து நடைமுறைப்படுத்து மாறும் ஜனாதிபதியின் செய லாளர் பொது நிர்வாக அமைச் சின் செயலாளர் மற்றும் ஓய் வூதியப் பணிப்பாளர் ஆகியோ ருக்கு பணிப்புரை விடுத்துள் ளார்.

# தௌஹீத் ஜமாத் அமைப்பின் 4 பேர் மீது குற்றப்பத்திரிகை!

சென்னை, ஓக. 20

இலங்கையில் தடை செய் யப்பட்ட அடிப்படை வாத அமைப்பான தௌஹீத் ஜமாத் துடன் தொடர்புடைய நான்கு பேருக்கு எதிராக இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்தக் குற்றப்பத்திரிகைகள் நேற்று முன்தினம் சென்னை விசேட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2022 ஆரம்ப காலப்பகுதி யில் தமிழ்நாட்டின் மயிலாடு துறையில் பொலிஸ் அதிகாரி களை துப்பாக்கி முனையில் மிரட்டியதற்காக கைது செய் யப்பட்ட நீடூர் சாதிக் பாட்ஷா என்ற ஐ.சி.ஏ.எம்.ஏ சாதிக் உட்பட நான்கு பேர் மீதே, இந்த குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தற்காப்புக் கலை பயிற்சி யாளரான சாதிக் பாட்ஷா மற்றும் கோவையைச் சேர்ந்த ஆர். ஆஷிக் என்ற முகமது ஆஷிக் இலாஹி, காரைக் காலைச் சேர்ந்த முகமது இர்பான், சென்னையைச் சேர்ந்த ரஹமத்துல்லா என்ற ரஹமத் ஆகியோர் திருவ னந்தபுரம், கேரளா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சதித்திட்டம் தொடர்பான கூட்டங்களை நடத்தியது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதியன்று மயிலாடுது றையில் வைத்துக் கைது செய் யப்பட்ட அவர்கள், திருச்சி மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர்.

இதன்பின்னர், சென்னை, புதுச்சேரியில் குற்றம் சாட்டப் பட்டவர்களுடன் தொடர் புடைய இடங்களில், சோதனை நடத்தியபோது, ஐ. எஸ். ஐ. எஸ் என்ற இஸ்லாமிய அரசு செய்திகளைக் கொண்ட துண்டுப்பிரசுரங்கள் உட்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட் டன.

# விடுதி சுற்றிவளைப்பு; 30 தோட்டாக்களும் மீட்பு

வவுனியா, ஓக. 20

வவுனியா தேக்கவத்தையில் விபசார விடுதி பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட் டது. இதன்போது இரு பெண் கள் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அங்கிருந்து ரி 56 ரக 30 தோட் டாக்களும் மீட்கப்பட்டன.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தக வலையடுத்து இந்த விடுதி சுற்றி வளைக்கப்பட்டது. இதன்போது விடுதியிலிருந்து இரு பெண் கள், விடுதி முகாமையாளரான ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர். விடுதியில் நடத்தப்பட்ட சோதனையில் மறைத்து வைக் கப்பட்டிருந்த ரி - 56 ரக 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன. (ஐ)

# அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை கொண்டுசென்றவர் கைதானார்!

கிளிநொச்சி, ஓக. 20

அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்ற வாகன சாரதி கைது செய்யப் பட்டுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதி யிலிருந்து கிளிநொச்சி நோக்கி நான்கு மாடுகளை ஏற்றி சென்ற சாரதியே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சிறியரக லொறி ஒன்றில் இரண்டு பசு மாடுகளும், இரு நாம்பன் மாடுகளையும் ஏற்றிச் சென்ற சமயம் வாகனமும், அதன் சாரதியும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற் றுள்ளது. கால்நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் இன்மை மற்றும் கால்நடைகளை ஏற்றி செல்வதற்கான வாகனத்தில் போதிய வசதிகள் இன்மை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சந் தேக நபர் மீது பதிவு செய்யப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட வாகன சாரதி விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எதிர் வரும் 25ஆம் திகதி நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி டி. எம். சதுரங்க தெரி வித்துள்ளார். (ஐ)

# முட்டை விலை குறைவடையும்

கொழும்பு, ஓக. 20

முட்டை விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி முட்டை ஒன்றின் விலையை 5 ரூபாயால் குறைக் கப்படவுள்ளதாக அந்தச் சங் கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இந்த விலை குறைப்பு அமுலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, முட்டை ஒன் றின் விலை 68 ரூபாயாக காணப்பட்டதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# அலங்கார உற்சவம்!

யாழ்ப்பாணம், ஓக. 20

சுன்னாகம் தெற்கு சிவபூத ராயர் ஆலய அலங்கார உற்ச வம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் மாலை 5மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி சுவாமி திருவீதியுலா இடம்பெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி சங்காபிஷேகமும் திருவூஞ் சலும் நடைபெறும். (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
20.08.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணில் எப்படி சமாளிக்கப் போகின்றார்?

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்கும் சீன உளவுக் கப்பலைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை இந்தியா தீவிரப்படுத்தியிருக்கின்றது. இதற்கு அமெரிக்காவும் உதவிவருவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. சீனாவை மையப்படுத்தித்தான் இலங்கை விவகாரம் சர்வதேச அளவில் நோக்கப்படுகின்றது. அண்மையில், அமெரிக்காவின் வெளியக உளவுத்துறையான மத்திய புலனாய்வு பணியகத்தின் (சி. ஐ. ஏ.) தலைவர்கூட, இலங்கை தொடர்பில் பேசியிருந்தார். அதாவது, சீனாவுடன் பொருளாதார தொடர்புகளை பேணிவரும் நாடுகள், இலங்கையின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருந்தார். மேற்குலகம், முக்கியமாக அமெரிக்கா எவ்வாறு இலங்கையை நோக்குகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தப் பின்புலத்தில்தான், சீன உளவுக் கப்பலொன்று, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது. இது விரும்பியோ விரும்பாமலோ கொழும்பை இந்து சமுத்திர பிராந்தியத்தின் அதிகார போட்டிக்குள் தள்ளிவிட முயற்சிக்கின்றது. இதனை எவ்வாறு ரணில் சமாளிக்கப் போகின்றார்? அனைத்து தரப்பையும் சம தூரத்தில் வைத்து கையாளுவதில் ரணிலால் வெற்றிபெற முடியுமா?

சீனாவின் அதிக தலையீடுகள் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில்தான் இடம்பெற்றது. ராஜபக்ஷவின் வெளிவிவகார அணுகுமுறையின் விளைவாகவே சீனாவின் பிடி இலங்கைக்குள் இறுகியது. இந்து சமுத்திர பிராந்தியத்தில் தனது பிரசன்னத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாகவே இலங்கையை சீனா பயன்படுத்த முயற்சிக்கின்றது. இலங்கையை நோக்கிய நகர்வுகள் இதனையே தெளிவுபடுத்துகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் புவியியல் அருகாமை, அதற்கு பக்கபலமாகவும் வாய்ப்பாகவும் இருக்கின்றது. இதேவேளை, இந்தியாவின் உடனடி அயல்நாடான இலங்கைத் தீவின் மூலம் சீனா பதற்றங்களை அதிகரிக்க முற்பட்டால், திபெத் ஊடாக இந்தியா நெருக்கடியை அதிகரிக்க முடியும். இவ்வாறான வாய்ப்பும் இந்தியாவுக்கு உண்டு.

ஆனால் கேள்வி, இவ்வாறான அதிகாரப் போட்டிக்குள் அதிகம் சிக்குப்படாமல் அதேவேளை அனைத்து தரப்புக்களையும் சம தூரத்தில் வைத்து கையாளக்கூடிய நிலையில் இலங்கை இருக்கின்றதா? இதுவரையில் ராஜபக்ஷக்களின் பிரச்னையாக இருந்த விடயம் - இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்னையாக மாறியிருக்கின்றது. ரணிலால் இதனை வெற்றிகரமாகக் கையாள முடியுமா?

அம்பாந்தோட்டை துறைமுக விடயத்தில் சீனாவின் உள்நுழைவுக்கான அடித்தளம் ராஜபக்ஷவின் காலத்தில் போடப்பட்டிருந்தாலும்கூட, அம்பாந்தோட்டை துறைமுகமானது, ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில்தான், 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது. சர்வதேச விவகாரங்களில் மிகுந்த அனுபவமுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஒரு தேசிய உடைமையை எவ்வாறு 99 வருட குத்தகைக்கு வழங்கினார்? விடயங்களை தூரநோக்கில் சிந்திக்கவில்லையா? கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில்தான், இவ்வாறானதொரு முடிவை அவர் எடுத்திருந்தாலும்கூட, ஏன் 99 வருட குத்தகைக்கு வழங்க வேண்டும்? குறைவான காலத்துக்கு வழங்கியிருக்கலாம். 99வருட குத்தகை என்பது, கிட்டத்தட்ட, ஒரு தேசிய சொத்தை பிறிதொருவருக்கு வழங்குவதற்கு சமமானது. எதிர்காலத்தில், இந்து சமுத்திர பிராந்தியத்தில் போர் பதற்றங்கள் ஏற்படுமாக இருந்தால், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா பயன்படுத்துவதை, கொழும்பால் அதிகம் தடுக்க முடியாமல் போகலாம். இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக அம்பாந்தோட்டை பயன்படுத்தப்படுவதை நாம் அனுமதிக்கமாட்டோம்- என்று கூறினாலும்கூட, போரின்போது இவ்வாறான வாக்குறுதிகளுக்கு எவ்வித பெறுமதியும் இருக்காது.

ரணில் எவரும் எதிர்பாராத வகையில் மீளவும் அதிகாரத்துக்கு வந்திருக்கின்றார். பொருளாதார நெருக்கடியினதும் அரசியல் கொந்தளிப்பினதும் விளைவாகவே ரணிலின் மீள் பிரவேசம் நிகழ்ந்திருக்கின்றது. இல்லாவிட்டால், ஓர் ஆசனத்துடன் இருந்த ஒருவர் ஒருபோதுமே ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. இந்த நிலையில், ராஜபக்ஷக்களால் ஏற்படுத்தப்பட்ட புவிசார் அரசியல் நெருக்கடிகளை ரணில் எவ்வாறு கையாளப் போகின்றார்? அவரால் சமாளிக்க முடியுமா? இந்தக் கேள்விக்கான பதிலில்தான், ரணிலின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

# ஐ. நா. உதவியை வேண்டும் எதிர்கட்சி தலைவர் சஜித்!

அலசுவது இராஜதந்திரி



இலங்கையின் தற்போதைய இக்கட்டான பொருளாதார நிலவரத்தைக் கையாள புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்மீதான தடையை நீக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடனான தொடர்புகளை பலப்படுத்த பணிமனை ஒன்றையும் நிறுவ முன்வந்துள்ளார்.

இத்தகைய பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி என்ற புதிய கட்சியை உருவாக்கி, தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸ இலங்கைக்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவினதும் கோரிக்கைகள் இலங்கை பொருளாதார ரீதியாக அதலபாதாளத்தில் வீழ்ந்து அபயக் குரல் எழுப்பி வருவதையே எடுத்துக்காட்டுகின்றது.

சுவர் இருந்தாலே சித்திரம் வரைய முடியும். எனவே, இலங்கையில் காத்திரமான ஆட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி புதிய முதலீடுகளை சர்வதேச ரீதியாக ஊக்குவிக்கவும் உறுதியான ஆட்சிமுறை அவசியமானதாகும். ஆட்சி அதிகாரங்களில் இருப்போர் ஜனநாயக ரீதியில் “கீரைக் கடைக்கு எதிர்க்கடை“ என்ற ரீதியில் அரச தரப்பிலும் எதிர்க்கட்சி தரப்பிலும் வேற்றுமைகளை கொண்டிருக்கலாம். ஆனால், நாட்டு நலன் கருதிய விடயங்களில் பொதுவான நிலைப்பாடுகளுக்கு ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் இக்கட்டான தருணங்களில் ஒன்றாக இயங்குவதே அவசியமானதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று சிறந்த ஆளுமையுள்ள தலைமைத்துவங்கள் எந்தவோர் அரசியல் தரப்பிலும் காணப்படாதுள்ளது. 2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று வன்னி நிலப்பரப்பிலிருந்து யுத்தத்தின் தாக்கத்தால் இடம்பெயர்ந்து வந்த மக்கள் வவுனியாவில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

அச்சமயம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளராக இருந்த தென்கொரியாவை பூர்வீகமாகக் கொண்டிருந்த பான் கீ மூன் இலங்கை வந்து வவுனியாவின் பூந்தோட்டம் அகதி முகாமில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களை சந்தித்திருந்தார். இதன் பின்னர் கருத்து வெளியிட்ட பான் கீ மூன் இலங்கையின் விமோசனத்துக்கு எதிர்காலத்தில் அரசியல் ரீதியான உறுதிப்பாடே அவசியம் என்று குறிப்பிட்டதோடு வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு விரைந்து அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், அன்றைய ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பொதுச்செயலாளர் பான் கீ மூன் விரும்பியதைப்போல இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு உடனடியாகவே அரசியல் தீர்வொன்றை காணும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்குமேயானால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கையை இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியைக் கோருகின்ற துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டிராது.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் உதவியை எப்போதோ பெற்றிருக்கவும் முடியும். இருந்தபோதிலும் தற்போது காலம் கடந்து விடவில்லை. சர்வதேச சமூகத்தின் பங்களிப்பின்றி இலங்கை பொருளாதார ரீதியாக தன்னை மீளவும் கட்டி எழுப்ப முடியாது என்பதே அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திடம் கையேந்தியுள்ள அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளிடமும் உதவிகளை எதிர்பார்த்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் புதிய அரசியலமைப்பு ஒன்றின் அவசியம் உணரப்பட்ட நிலையில் அதனை உருவாக்குவதற்கான முயற்சிகளும் மறுபுறத்தே இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியை எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியுள்ள நிலையில் சர்வதேச சமூகம் எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கான நிதிஉதவிகளை வழங்குவது விடயத்தில் மிக அவதானமாகவும் நிபந்தனைகளோடும் நடந்து கொள்ளும் என்றே எதிர்பார்க்க முடியும்.

ஏனெனில், இலங்கையின் நிதிமுகாமைத்துவம் என்பது எவ்வளவு தூரம் ஊழல் , மோசடி என்பவற்றால் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை இழந்துள்ளது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இத்தகைய பின்னணியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உட்பட சர்வதேச நிறுவனங்கள் இலங்கைக்கான உதவிகள் குறித்து இனிவருங் காலங்களில் எச்சரிக்கையோடு நடப்பவையாக இருக்கும் என்றே கருதமுடியும். •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 20 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 04
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
இன்று மகிழ்ச்சியான நிலை நீடிக்கும். குடும்பத்திற்காக செலவுகளை மேற்கொள்வீர்கள்.விருந்து விசேஷம் என செல்வீர்கள். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத செலவு உண்டாகும்.

**இடபம்**
செலவுகள் கட்டுப்படும். உடலும் மனமும் மகிழும் வகையில் இன்றைய பொழுது அமையும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும்.

**மிதுனம்**
வரவு ஏற்ற செலவுகளை சந்திப்பீர்கள். நினைத்த செயலை உறுதியுடன் முடிப்பீர்கள்.புதிய சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**கடகம்**
முயற்சிகளில் வேகம் உண்டாகும். வியாபாரத்தில் பணம் அதிகரிக்கும்.தொழிலில் புதிய யுக்தியைக் கையாள்வீர்கள். நண்பர்களால் மகிழ்ச்சி உண்டாகும். தடைபட்டிருந்த பணம் வந்து சேரும்.

**சிம்மம்**
உங்களுடைய செயல்களில் இழுபறி உண்டாகும். ஆன்மிக விருப்பம் நிறைவேறும்.குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும்.

**கன்னி**
இன்று உங்களது மனம் படபடப்பாகவே இருக்கும். நிம்மதி தேவையான நாள்.மதியத்திற்கு மேல் உங்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். நேற்று இருந்த சங்கடம் விலகும்.

**துலாம்**
வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். எதிர்பாராத பிரச்னைகளை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்களின் தொந்தரவால் மனம் அவதிப்படும்.குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
தம்பதிகளிடமிருந்து வந்த பிரச்னை விலகும். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். குடும்பத்தினரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் இருந்த சங்கடம் மறையும்.

**தனுசு**
இழுபறியாக இருந்து வந்த வேலை முடியும். மறைமுகத் தொல்லை விலகும்.குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். தொழிலில் லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் பொழுதைக் கழிப்பீர்கள். மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தினரின் ஆலோசனைகளால் உடலும் மனமும் மகிழ்ச்சி அடையும்.நினைத்தது நடக்கும்.

**கும்பம்**
தொழிலில் நிதானம் தேவை.முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழிலில் விழிப்புணர்வு தேவைப்படும் நாள். தாய்வழி உறவினர் ஒருவர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
உங்களுடைய செயல்களில் தீவிரம் காட்டுவீர்கள். நிதி நிலையை சீராகும். குடும்பத்தினரின் தேவையறிந்து செயல்படுவீர்கள். உங்களுடைய செலவாக்கு உயரும். விருந்து விசேஷம் என சென்று வருவீர்கள். புதிய முயற்சி வெற்றி பெறும்.

# இணைந்து செயல்பட முடியாது! எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!!

சென்னை, ஓக. 20

ஓ. பன்னீர்செல்வத்துடன் இணைந்து செயல்பட முடியாது என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க. பொதுக் குழு தீர்ப்பு தொடர்பாக சென்னையில் நேற்று அவர் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓ.பன்னீர்செல்வம், "முன்னாள் முதல்வர்கள் எம். ஜி. ஆர், ஜெயலலிதா காலத்தில் இருந்து அ. தி. மு. கவுக்காக உழைத்தவர்கள் சசிகலா, டி. டி. வி. தினகரன் உள்பட யாராக இருந்தாலும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்தக்கோரிக்கையை எடப்பாடி பழனிசாமி நிராகரித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, "அ. தி. மு. க. இயக்கத்தை சிலர் தம்வசம் கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர்.

அதனை தடுக்கும்போது தான் சில பிரச்னைகள் உருவாகின்றன. ஜெயலலிதா மறைவுக்குப் பின் இரண்டு அணியில் இருந்தவர்கள் 2017இல் ஒன்றாக இணைந்தோம். 2017இல் பொதுக்குழு உறுப்பினர்கள் மூலமாகவே ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவி தோற்றுவிக்கப்பட்டது.

அ. தி. மு. கவில் ஒருங்கிணைப்பாளர்கள் தொண்டர்களால் தெரிவு செய்யப்படவில்லை. அ. தி. மு. கவில் பொதுச்செயலாளர் பதவிக்கு இணையாக ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவி உருவாக்கப்பட்டது. அ. தி. மு. கவில் பொதுக்குழுவுக்கு மட்டுமே முழு அதிகாரம். செயல்குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டால் மட்டுமே தீர்மானம் செல்லும்.

ஒருங்கிணைப்பாளர்களை தொண்டர்கள் தெரிவு செய்யும் வகையில் விதி திருத்தப்பட்டது. ஆனால், அந்த விதிக்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. பொதுக்குழு ஒப்புதல் கிடைக்காததால் ஒருங்கிணைப்பாளர்கள் பதவிகள் காலாவதியாகின. ஒற்றைத் தலைமை என்பது தொண்டர்களின் விருப்பம்.

11ஆம் திகதி பொதுக் குழுவுக்கு பன்னீர்செல்வத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அவர் வரவில்லை. ஆனால், நீதிமன்றம் செல்கிறார். அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தை ரௌடிகளை வைத்து தாக்கி ஆவணங்களை எடுத்துச் சென்றவர் இவரே, இவருடன் எப்படி இணைந்து செயல்பட முடியும்.

கடந்த சட்டமன்ற தேர்தல் தோல்விக்கு காரணம் பன்னீர்செல்வம்தான், தி. மு. கவுடன் உறவு வைத்திருக்கிறார். பொதுக்குழுவுக்குத்தான் அனைத்து அதிகாரங்களும் உள்ளன. தொண்டர்கள் பலம் அவருக்கு இருந்தால் அதை அவர் பொதுக்குழுவில் நிரூபிக்கலாமே" - என்றார் எடப்பாடி பழனிசாமி. (ஐ)

# இலவசங்களால் நாடு வளர்ந்தது என்பதை நிரூபிக்க முடியுமா?

## சீமான் கேள்வி

சென்னை, ஓக. 20

இலவசங்களால் நாடு வளர்ந்துள்ளது என்பதை நிதியமைச்சரால் நிரூபிக்க முடியுமா? என பிரதமர் மோடிக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், இலவசங்களால் நாடு வளர்ந்துள்ளது என்பதை நிதியமைச்சர் பி. டி. ஆர். பழனிவேல் தியாகராஜனால் நிரூபிக்க முடியுமா? இலவசம் என்பது ஒருவகையான லஞ்சம். இலவசங்களால் ஒரு புள்ளி அளவுக்குகூட நாடு வளராது. விவசாயிகளை வாழ்நாள் முழுவதும் பிச்சைக்காரர்களாக வைத்துக் கொண்டு, அவர்களுக்கு அவ்வப்போது ரூ.2 ஆயிரம் வழங்குவது எந்த வகையில் நியாயம்? விவசாயிகளை கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்றது அவமானம்.

காங்கிரஸ், பா. ஜ. க. ஆகியவை வேறு வேறு கட்சிகள் என்றாலும், கொள்கையில் ஒன்றுதான். தற்போது காங்கிரஸ் கட்சியும் விநாயகர் சிலைகளை வைக்கத் தொடங்கி விட்டது. சுதந்திரப் போராட்டத்துக்காக 12 ஆண்டுகள் சிறையில் இருந்த ஜவகர்லால் நேருவையும், ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்த சாவர்க்கரையும் பிரதமர் மோடி ஒப்பிட்டு பேசலாமா? - என்றும் அவர் கேட்டார்.

# சிவசேனாவுக்கு நடந்ததே தி.மு.க. கட்சிக்கும் நடக்கும்!

## பா. ஜ. க. கட்சி எச்சரிக்கை

சென்னை, ஓக. 20

நாம் நிச்சயம் ஆட்சிக்கு வருவோம். மகாராஷ்டிராவில் சிவசேனாவுக்கு நடந்ததுதான் இங்கே தி. மு. க.வுக்கும் நடக்கும் என்று கூறியிருக்கிறார் பாரதிய ஜனதாக கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை.

புதுக்கோட்டை தொகுதி சிலரின் ஆதாயத்துக்காக 4 பகுதிகளாக துண்டாடப்பட்டுள்ளன. தொகுதி மறுசீரமைப்பு வரும்போது இது மீண்டும் உருவாகும். சமூக நீதி, சமநீதி பேசும் தி. மு. க. ஆட்சியில், சுதந்திர தினத்தில் 20 ஊராட்சி மன்றத் தலைவர்களால் தேசியக் கொடியேற்ற முடியவில்லை.

22 ஊராட்சி மன்றத் தலைவர்களால் அவர்களின் நாற்காலியில் அமர முடியவில்லை. 42 ஊராட்சி மன்றத் தலைவர்களின் பெயர் பலகையை வைக்க முடியவில்லை. இதற்கு காரணம், அவர்கள் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான். இதுதான் திராவிட மொடல் ஆட்சியா?.

திமுக ஆட்சியில் ஊழல் இல்லாத இடமே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்பு பா. ஜ. க. எங்கே இருக்கிறது எனக் கேட்டார் கருணாநிதி. இப்போது அனைத்து இடங்களிலும் பா. ஜ. கவினர் நிரம்பியுள்ளனர். முதலில்கேலி செய்வார்கள். அடுத்து திட்டுவார்கள். பிறகு அடக்கு முறையை ஏவி விடுவார்கள். தொடர்ந்து, எதிரி என்பார்கள். இவற்றைச் சந்தித்தவர்கள் ஆட்சிக்கு வருவார்கள்.

தமிழகத்தில் இப்போது நாம் 3ஆவது இடத்தில் இருக்கிறோம். பா. ஜ. க. தலைவர்கள், கட்சியினர்மீது அடக்குமுறை ஏவிவிடப்படுகிறது. எனவே, நாம் நிச்சயம் ஆட்சிக்கு வருவோம். மகாராஷ்டிராவில் சிவசேனாவுக்கு நடந்தது தான் இங்கே தி. மு. க.வுக்கும் நடக்கும் - என்றார்.

# நெல்லை கண்ணன் காலமானார்!

சென்னை, ஓக. 20

பிரபல தமிழ் அறிஞரும், இலக்கிய பேச்சாளருமான நெல்லை கண்ணன் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 77.

பிரபல தமிழ் எழுத்தாளரும், இலக்கிய பேச்சாளருமான நெல்லை கண்ணன் கடந்த சில மாதங்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் அவர் காலமானார்.

தமிழக அரசின் இளங்கோவடிகள் விருது அண்மையில் நெல்லை கண்ணனுக்கு வழங்கப்பட்டிருந்தது. கங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகியான நெல்லை கண்ணன், முன்னாள் முதல்வர் காமராஜர் முதல் தற்போதைய முதல்வர் மு. க. ஸ்டாலின் வரை அனைவருடனும் நட்புறவில் இருந்தவர். மறைந்த பேச்சாளர் நெல்லை கண்ணன் "தமிழ்க்கடல்" என்ற அடைமொழியாலும் அறியப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டாபய நாடு திரும்பியதும் உரிய பாதுகாப்பு வழங்குங்கள்!

## அரசிடம் மொட்டுக் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பாக நாடு திரும்பவும், அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளையும் செய்து கொடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

சர்வகட்சி அரசு உட்பட அடுத்தகட்ட வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும், முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கு தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது. பஸில் ராஜபக்ஷ, சாகர காரியவசம் உட்பட மொட்டு க் கட்சியின் பிரமுகர்கள் பலரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (அ)



# ஜனாதிபதியை சந்தித்த ஐ.நா. சபை பிரதிநிதிகள்!

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பாங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் மஸ்னெக்யன் கார், ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தின் பிரதானி ஆண்ட்ரியாஸ் கர்பாதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஜனாதிபதியின் இளைஞர் மற்றும் நிலையான அபிவிருத்தி விவகாரப் பணிப்பாளர் ரந்துல அபேதீர ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 20

அரசாங்கத்தினால் அத்தியாவசிய உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படாவிட்டால் சில பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.

தற்போது அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சந்தையில் ஏனைய பொருட்களுக்கான விலைகளை வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் அடிக்கடி அதிகரிப்பதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட உற்பத்தி சார்ந்த பொருட்களின் விலைகள் அண்மைய காலமாக பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன.

அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படாமையே இதற்கான காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பிஸ்கட், சவர்க்காரம், சலவைத்தூள், உடனடி நூடில்ஸ், சோயா உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் தற்போது வெகுவாக அதிகரித்துள்ளன.

ஆகவே கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# யாழ் நகர் நவீன சந்தை கட்டடத்தில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள புதிய சந்தை கட்டடத் தொகுதிக்குள் ஆண் ஒருவரின் சடலம் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று காலை குறித்த சடலம் அவதானிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

விசேட தேவைக்குட்பட்ட நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

குறித்த சடலத்தை மீட்டு அடையாளம் காணும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாணவர்களை இலக்கு வைத்து கஞ்சா விற்று வந்தவர் சிக்கினார்

கொழும்பு, ஓக. 20

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த இரத்மலானை பிரதேசத்தில் வசிக்கும் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா விற்பனை செய்வதாக கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இந்த சோதனையை நடத்தியுள்ளனர்.

இச்சோதனையின்போது சந்தேகநபரிடம் இருந்து 710 மில்லிகிராம் கேரளா கஞ்சா, இலத்திரனியல் தராசு மற்றும் 13,500 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# மோட்டார் குண்டுகளுடன் பளையில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஓக. 20

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வெடிபொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாவில் பகுதியில் நபர் ஒருவரின் வீட்டில் வெடிபொருட்கள் வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த வீடு சுற்றி வளைக்கப்பட்டது.

பின் குறித்த நபரின் வீட்டில் தேடுதலில் ஈடுபட்ட போது 910 கிராம் வெடிமருந்து கழற்றிய நிலையில் இரண்டு மோட்டார் குண்டும் நல்ல நிலையில் மூன்று மோட்டார் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

குறித்த நபரை கைது செய்த பளை பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். (அ)

# 10 மணித்தியாலம் நீர்வெட்டு!

கொழும்பு, ஓக. 20

கொழும்பு 05 மற்றும் 06 ஆகிய பகுதிகளில் இன்று இரவு 11 மணி முதல் மறுநாள் காலை 9 மணி வரை 10 மணித்தியாலங்களுக்கு நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக அப்பகுதிகளுக்கு நீர் விநியோகம் நிறுத்தப்படுவதாக அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் கொழும்பு 04 பகுதிக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படும் என நீர் வழங்கல் சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)



# பெண்கள் உரிமைக்கு தாமாகவே குரல் கொடுக்கும் பெண்கள் குழு!

மன்னார், ஓக. 20

பெண்கள் உரிமைகளை தாமாகவே குரல் கொடுக்கும் வகையில் வடக்கு மாகாணப் பெண்கள் குழு உருவாக்கம் செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஆரம்பமாக, பிரதேச செயலக பிரிவுகளில் பெண்கள் குழுக்களை ஆரம்பிக்கும் நோக்குடன், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று பெண்கள் குழு ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச குழுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ந்து அந்த குழுக்களிலிருந்து மாவட்ட குழு உருவாக்கப்பட்டு, பின்னர் மாவட்ட குழுக்களிலிருந்து மாகாண குழு நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு நிலக்கரி வழங்க முன்வந்துள்ள ரஷ்ய நிறுவனம்!

கொழும்பு, ஓக. 20

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

நிலக்கரி விநியோகத்துக்கான விலைமனுக் கோரலுக்கு பதிலளித்த இரண்டு நிறுவனங்களில், ரஷ்ய நிறுவனம் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளதாகவும், மற்றைய நிறுவனங்களும் மேன்முறையீடு செய்யலாம் என்றும் லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்தார்.

ஐந்து மாத கடன் சலுகைக் காலத்தை கோரினோம். இருப்பினும், ரஷ்ய நிறுவனம் ஆறு மாதங்களை வழங்க ஒப்புக் கொண்டது என்றும் அவர் கூறினார். (அ)

# 10 கிலோ தங்க பிஸ்கட்டுகளுடன் 2 பேர் விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஓக. 20

இலங்கைக்குள் 200 மில்லியன் பெறுமதியான 9.5 கிலோ கிராம் தங்க பிஸ்கட்டுகளை கடத்த முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் விமானப் பயணி மற்றும் கட்டுநாயக்க பெண் ஊழியர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டுபாயில் இருந்து ஈ.கே. 650 என்ற விமானத்தில் பயணித்த போதே விமான நிலையத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து சுமார் 80 தங்க பிஸ்கட்டுகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ள நிலையில், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# சிறுவர்களுக்கான உளசமூக செயல்திட்டம் வாகரையில்

மட்டக்களப்பு, ஓக. 20

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத்திட்டங்களை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதற்கமைவாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியிலான இவ் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

"ஒரு நாளில் உன்னை மகிழ்விப்போம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மதுரங் கேணிகுளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகதருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ. குகதாசன் ஒருங்கிணைப்பில் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரனின் வழிகாட்டலில் பிரதேச செயலாளர் க.அருணன் தலைமையில், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ- ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது .

இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாகரை ஆதிவாசிகள் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் சிறுவர்களுகள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் பாதுகாப்பு , சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் , வீட்டை அடிப்படையாக கொண்ட பராமரிப்பின் முக்கியத்துவம் , திணைக்களத்தினுடைய மாற்றுப் பராமரிப்பு தேசிய கொள்கை திட்டம் , சிறுவர் பங்கேற்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு சிறுவர்களுக்கு எதிராக ஏற்படக்கூடிய சகல விதமான துன்புறுத்தல்களையும் குறைக்கும் அல்லது தடுக்கும் வகையிலாக சமூக மட்டத்திலே கட்டமைக்கப் பட்டு நடைமுறைப்படுத்தும் வகையில் "கிராமிய மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு" மற்றும் "சிறுவர் கழகங்களை " மீளமைப்புச் செய்வதும் , சிறுவர்களுக்கான படைப்பாக்க திறன் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சி சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் நூறு சிறுவர்கள் என பங்கேற்றனர். (அ)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாப்பை திருத்த அவதானம்

கொழும்பு, ஓக. 20

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாப்பை திருத்துவதற்கு கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவதானம் செலுத்தியுள்ளார்.

அடுத்த மாதம் 2 ஆம் இடம் பெறவுள்ள கட்சியின் 71 ஆம் வருட பூர்த்தியின் போது இந்த யாப்பு திருத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருட பூர்த்தி மஹரகம வில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம் பெறவுள்ளது.

அன்றையதினம் அகில இலங்கை மத்திய செயற் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அறவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விமலின் கூட்டணி எமக்கு சவாலாகாது

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஓக. 20

**விமல் வீரவன்ஸ தலைமையில் உதயமாகவுள்ள புதிய அரசியல் கூட்டணி தமது கட்சிக்கு சவாலாக அமையாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார,

"மொட்டு கட்சியுடன் இணைந்து போட்டியிட்டதால் தான் விமல் தரப்பு வெற்றி பெற்றது. முடிந்தால் தனித்து போட்டியிட்டு 9 ஆயிரம் வாக்குகளை பெற்று காட்டுமாறு சவால் விடுக்கின்றோம்." - எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், 2010 ஜனாதிபதி தேர்தலின்போது பொன்சேகாவுக்கும் வாக்குகள் கிடைத்தன. எனினும், புதிய கட்சி ஆரம்பித்த பின்னர் ஒரு வீத வாக்குகூட கிடைக்கப்பெறவில்லை. அவருக்கு என்ன நடந்தது? எனவே, புதிய கூட்டணி எமது கட்சிக்கு சவாலாக அமையாது எனவும் அவர் கூறினார். (அ)

# விபத்தில் மாணவன் பலி!

கொழும்பு, ஓக. 20

திக்வெல்ல உடதெனிய பிரதேசத்தில் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் இருவர் சைக்கிளில் பயணித்ததாகவும், அதனைக் கட்டுப் படுத்த முடியாமல் சுவரில் மோதி விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த சைக்கிளில் பயணித்த இரு மாணவர்கள் திக்வெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், முன்னால் பயணித்த மாணவர் உயிரிழந்துள்ளார்.

திக்வெல்ல, கொண்டெனிய பிரதேசத்தில் வசிக்கும் 13 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய பாடசாலை மாணவர் மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (அ)

# இணையவழிக் கற்றலின்போது சிறுவருக்கு பாலியல் தொந்தரவு

## முறைப்பாட்டுக்கு விசேட இலக்கம்

கொழும்பு, ஓக. 20

இணையவழி கற்றல் செயற்பாடுகளின் போது சிறுவர்களுக்கு பாலியல் தொந்தரவுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளம் ஊடாக சிறுவர்கள் பாலியல் ரீதியான தொந்தரவுக்கு உட்படுத்துபவர்கள் தொடர்பிலான தகவல்களை 1929 என்ற இலக்கத்துக்கு வழங்குமாறு கோரப் பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதன் காரணமாக சிறுவர்கள் ஸ்மார்ட் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர். இதன்போது, பலர் சிறுவர்க ளை பல்வேறுபட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகின்றனர்.

இதுபோன்ற பல சம்பவங்கள் தற்போது பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க தெரிவித்தார். (அ)

# வரிசை யுகத்துக்கு முடிவு கட்டிவிட்டோம்

## பெருமிதம் கொள்கிறது மொட்டு கட்சி

கொழும்பு, ஓக. 20

"வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டோம். மக்கள் தற்போது இயல்பு நிலையை நோக்கி நகர்கின்றனர்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் வரிசை மற்றும் எரிவாயு வரிசை என்பனவே பெரும் பிரச்னையாக இருந்தன. வரிசைகள் பற்றி சர்வதேச மட்டத்திலும் பேசப்பட்டது. அந்த வரிசை யுகம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட் டுள்ளது. 100 சதவீதம் அல்லா விட்டாலும், மக்களுக்கு நெருக்கடி இல்லாத நிலைமை உருவாகியுள்ளது.

நெருக்கடியில் இருந்து நாம் தப்பியோடவில்லை. சவால்களுக்கு மத்தியிலும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# எரிவாயு உள்ளிட்ட சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தகவல்

கொழும்பு, ஓக. 20

எரிவாயு விலை கட்டுப்பாட்டுக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாக, சந்தை, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது எரிவாயு விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது.

இந்தநிலையில், உலக சந்தையின் விலை, செலவு, நுகர்வோருக்கு எரிவாயு விற்பனை செய்யப்படும் சில்லறை விலை என்பன குறித்து அவதானம் செலுத்தி, எரிவாயு விலைக் கட்டுப்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம், அண்மைக் காலமாக, சிமெந்து, இரும்பு, வயர் மற்றும் பிஸ்கட் உள்ளிட்ட பல உள்நாட்டு உற்பத்திகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

அந்த விலைகள் நியாயமானவையா? என்பதை ஆராய்வதற்காக, அவற்றின் விலைச் சூத்திரம் குறித்து, நுகர்வோர் அதிகார சபையில் முன்னிலையாகி அறிக்கை ஒன்றை வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்கு அறியப்படுத்தப் பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கு அமைய, அவற்றின் கட்டுப்பாட்டு விலைக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# தனியார் மயமாக்கவுள்ள மத்தள விமான நிலையம்

கொழும்பு, ஓக. 20

மத்தள சர்வதேச விமான நிலையத்தை தனியார் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விமானப் போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

விமான நிலையத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி பங்குகளும் விற்கப்படும். அத்துடன் மத்தள விமான நிலையத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்ற வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் விமானப் போக்குவரத்து செயல்முறையை மறுசீரமைக்கும் போது அந்நிய செலாவணியை ஈட்டும் வகையில் விமான நிலையம் மாற்றப் பட வேண்டும். பராமரிப்பு தரத்தையும் மேம்படுத்தவேண்டும் எனவும் அமைச்சர் குறிப் பிட்டார். (அ)












# நல்லூர் கந்தன் ஆலய பஞ்ச தள குமார கோபுர கலாசாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஓக. 20

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வட திசையில் குபேர வாயில் கோபுரத்திற்கு உட்புறமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குபேர திக்கு, குமார வாசல் கோபுர கலசாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வரும் நிலையில் நேற்று கார்த்திகை உற்சவ பூஜைகள் நடைபெற்றன.

நேற்று இடம்பெற்ற வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து ஆறுமுக பெருமான் பக்தர்கள் மத்தியில் எழுந்தருளி அருட்காட்சி அளித்தார்.

இதனைத் தொடர்ந்து கோபுர கலசாபிஷேகம் இடம் பெற்றது.

அதன்போது பல நூற்றுக் கணக்காணோர் கலந்து கொண்டு ஆறுமுக பெருமானை தரிசித்தனர். (அ)

# தென் கடலில் விபத்துக்குள்ளான படகிலிருந்து 6 மீனவர்கள் மீட்பு!

கொழும்பு, ஓக. 20

மாத்தறை - தேவேந்திர முனையிலிருந்து சுமார் 18.5 கடல் மைல் (34 கிலோமீற்றர்) தொலைவில் உள்ள தென் கடலில் விபத்துக்குள்ளான மீன்பிடிப் படகிலிருந்த இலங்கை மீனவர்கள் 6 பேரை நேற்று அதிகாலை கடற்படையினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

மீன்பிடிப் படகு கப்பலொன்றுடன் மோதியதில் விபத்துக்குள்ளானதையடுத்து, கடலில் மூழ்க ஆரம்பித்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி இரவு படகின் உரிமையாளர் குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் உள்ள கடற்பாதுகாப்புத் திணைக்களத்துக்கு தகவல் வழங்கினார்.

அதன்படி கடற்பாதுகாப்பு திணைக்களம் ஊடாக கடற்படைக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த கடற்படையினர் படகில் இருந்த அனைத்து மீனவர்களையும் உயிருடன் மீட்டு கரைக்கு அழைத்துவந்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# குற்ற புலனாய்வுப் பிரிவினர் மைத்திரியிடம் விசாரணை!

கொழும்பு, ஓக. 20

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பில் முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.



முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மூன்று மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு இராஜகிரியவில் உள்ள ரோயல் பார்க் காண்டோமினிய வளாகத்தில் இவோன் ஜோன்சன் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு 2012 இல் ஆரம்பத்தில் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் பின்னர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் கொலைக் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார்.

அத்துடன், ரோயல் பார்க் கொலை வழக்கில் உயர்நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியிருந்தார். (அ)

# வடக்கு விவசாய திணைக்கள பணிப்பாளர் அலுவலக முறைகேடுகளை விசாரிக்க குழு!

## மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமித்தார்

யாழ்ப்பாணம், ஓக. 20

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற முறைகேடுகளை விசாரணை செய்வதற்கு 3 பேர் கொண்ட குழுவை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளரான எஸ்.சிவகுமார் நிர்வாக நடைமுறைகளை மீறி நீண்ட காலம் செயற்பட்டிருந்தார் என குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தசாப்த காலத்திற்கு முன்னர் விவசாயப் பணிப்பாளராக க.சிவகுமார் நியமிக்கப்பட்ட போதும், அவரிலும் மூத்த அதிகாரிகள் கடந்தே அந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அந்த நியமனம் அரசியல் செல்வாக்கு என அப்போது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கடந்த விவசாயப் பணிப்பாளரின் காலத்தில் விவசாய சேவை அதிகாரிகளில் பலருக்கும், அவருக்குமிடையில் சுமுகமான உறவிருக்கவில்லை. ஓரிருவரை தவிர மிகுதியான அனைவரும் மாகாண விவசாயத் திணைக்களத்தை விட்டு வெளியேறி விட்டனர். இது வடக்கு விவசாய திணைக்களக் கட்டமைப்பில் நீண்டகால ரீதியில் பெரும் தாக்கத்தை செலுத்திருந்தது.

வடக்கு விவசாயத் திணைக்கள விவகாரம் தொடர்பில் முன்னாள் ஆளுநர்கள் சரேன் ராகவன், பி.எஸ்.எம்.சாள்ஸ் போன்றவர்களிடம் பல தரப்பினர் சுட்டிக்காட்டியபோதும், அவர்கள் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்பட்டது.

எனினும், வடக்கின் தற்போதைய ஆளுநர் ஜீவன் தியாகராஜா இந்த விவகாரத்தில் பல தரப்பு அழுத்தங்களையும் புறந்தள்ளி அதிரடி நடவடிக்கைகள் எடுத்துள்ளார் என கூறப்பட்டுள்ளது.

வடக்கு விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், அமைச்சின் செயலாளர்களின் இடமாற்றத்தை தடுத்து நிறுத்த கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தலையீடு செய்திருந்தார். எனினும், அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்காமல் ஆளுநர் இந்த விடயத்தில் செயற்பட்டு, தனது முடிவை செயற்படுத்தியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக, வடக்கு விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் பணிமனையில் நடந்த நிதி, நிர்வாக முறைகேடுகளை ஆராய 3 பேர் கொண்ட ஆரம்ப புலன் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை அமைச்சின் செயலாளர் விஷ்ணு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அதிகாரி சாந்தசீலன், வடக்கு மாகாண விதை உற்பத்தி கூட்டுறவு நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் சதீஷ் ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் தொடர்பான சுமத்தப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்த குழு ஆராயும் என கூறப்பட்டுள்ளது. (அ)

# பெற்றோலை 250 ரூபாய்க்கு வழங்க முடியும்!

கொழும்பு, ஓக. 20

உலக சந்தையில் எரிபொருள் விலையைப் பார்க்கும்போது உள்நாட்டில் ஒரு லீற்றர் பெற்றோலை 250 ரூபாய்க்கு வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை கடந்த காலங்களில் பாரியளவில் அதிகரித்திருந்தாலும், பரல் ஒன்றின் விலை 120 டொலரில் இருந்து 90 டொலராக குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு



# இலங்கையின் பொருளாதாரத்தை



## மீள் கட்டியெழுப்பக் கூடிய முக்கிய துறைகள் !!

புலோலியூரான் சதாவதானி

இதுவரை வரலாறு காணாத அளவு பாரியளவிலான பொருளாதார நெருக்கடிக்கும், உள்நாட்டு பூசல்களுக்கும் முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது இன்று இலங்கை அரசு. பெரும்பாலும் இறக்குமதிகளை நம்பியே நகரும் தீவுநாடான இலங்கை, டொலரின் கையிருப்பின்றி அத்தியாவசிய பொருட்தேவைகளைக் கூட நிவர்த்தி செய்ய முடியாது நிரம்பலை விஞ்சிய கேள்விப் பொருளாதார சக்கரத்தோடு நகர்ந்துக்கொண்டிருக்கிறது. இதற்கிடையில் மூழ்கும் கப்பலின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு பதில் மேலும் பல துவாரங்களை தோண்டுவதாகவே அமைந்திருந்தது அரசின் கடந்த கால காய் நகர்த்தல்கள். இச்சிக்கலை தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டுத் தலைமையும் பொருளாதார நிபுணர்களும் தலைகளை பிய்த்துக் கொண்டிருக்க, நிவாரணங்களுக்காக நட்பு நாடுகளிடம் கரமெய்தியும், சர்வதேச நாணய நிதியத்திடம் பண உதவிகளையும் கோரி நாடியிருக்கிறது இலங்கை. மேலும் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதற்காக வங்கி வட்டி வீதத்தை அதிகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பொருளாதார இறுக்கத்திற்கு அரசின் நெடுங்கால நடவடிக்கைகளே ஏதுவாக இருந்திருக்கிறது. குறிப்பாக முறையான வளப் பயன்பாடின்மை. எதிர்கால பயன்பாட்டிட்கான துல்லியமான வியூகங்கள் இன்மை. கடந்தகால கடன் கொள்கைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்றென்று தொடர்ந்து சறுக்கத்தொடங்கிய பொருளாதாரம் ரஷ்ய - யுக்ரைன் போரின் பின்பு கழுத்துமுறியும் நிலைக்கு தள்ளப் பட்டு மூச்சிழுத்து விடுவதற்கேனும் அவகாசம் இல்லாமல் திணறிக்கொன்டிருக்கிறது இலங்கை.

பண்டைய இலங்கையை நோக்கி காலப்பயணமொன்றை மேற்கொள்ள முடியுமேயானால் முற்றிலும் வேறுபட்ட தன்னிறைவான, தழும்பிய உற்பத்திப்பண்டங்களை ஏற்றுமதி செய்த தானியக் களஞ்சியமாய் அமைந்திருந்த விவசாய நாடொன்றை காணக்கூடியதாக இருக்கும். ஆனால் இன்று சிலரின் அரசியல் அபிலாஷைகளுக்காகவும், மறைமுகமான அந்நிய ஆதிக்கங்களினாலும் வாழ்ந்துக் கெட்டதென்ற கூற்றுக்கு பேருதாரணமாய் திகழ்கிறது.

இன்றும் இப்பொருளாதார பின்னடைவை தளர்த்து, இலங்கை பெருமூச்சுவிடத் துவங்கியப் பின் தேசத்தை மீழ் கட்டியெழுப்பவும் பெரும்பான்மையான துறைகளில் தன்னிறைவான நாடாகவும் அந்நிய முதலீடுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆசியாவின் ஐஷ்வர்யமாக இலங்கையை நம்மால் உருவாக்க முடியுமென்பதில் இட்டுக்கட்டும் வார்த்தைகளுக்கு ஒருபோதும் இடம் இல்லை. அவ்வாறு மேம்படுத்தக்கூடிய கையிருப்பிலுள்ள சில துறைகளையும் அவற்றை மேம்படுத்த அரசினால் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய வழிமுறைகள் சிலவற்றையும் நோக்கலாம்.

### விவசாயத் துறை

தொழிநுட்ப வளர்ச்சியில் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகர்ந்துக்கொண்டிருக்கும் போதும் இலங்கை விவசாய நாடென்பதில் மாற்றுக்கருத்தில்லை. கடந்த காலங்களில் விவசாயம் மற்றும் விவசாயம் சார் துறைகள் சார்ந்து தவறான தீர்வுகளை எடுத்தமையும் இன்றைய பொருளாதார நெருக்கடியில், நேராடியாகவும் மறைமுகமாகவும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

குறிப்பாக டொலரின் இருப்பை தக்கவைப்பதற்காக கரிம இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளப் போவதாக அசேதன பசளைக் கொள்வனவை தடை செய்த அரசாங்கத்தின் திடீர் வர்த்தமானியால் விவசாயிகளும் விவசாயமும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டதிலிருந்தே பிள்ளையார் சுழியிட்டு வெடிக்கத் தொடங்கிற்று பொருளாதார நெருக்கடி.

விவசாயத்தில் முன்னிலை வகிக்கும் மற்றும் ஐரோப்பிய நாடுகள் கூட கரிம விவசாயத்திற்கு முற்றாக மாறுவதற்கான சாத்தியப் பாடுகளுக்களைத் தேடிக்கொண்டிருக்கும் போது எந்தவித முன்னறிவிப்புகளும் இன்றி தேசத்தின் விவசாயத்தை முற்றிலும் இயற்கை விவசாயத்திற்கு மாற்றப்போவதாய் இரசாயன பசளை இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் முற்றிலுமோர் பகிடியாய் அமைந்திருந்தது. நாட்டின் வளர்ச்சிக்கு பேரளவில் பங்கு வகிக்கும் விவசாயத்திற்கு அரசு தங்கள் கவனத்தை அவ்வளவாய் ஒதுக்காதது நாண வேண்டிய ஒரு விடயமாகத்தான் நான் கருதுகின்றேன்.

இலங்கையின் விவசாயத்தை பொறுத்த வரையில் பெரும்பாலும் நுகர்வு விவசாயமே மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது ஏற்றுமதி செய்வதற்கான வர்த்தக விவசாயமாய் அன்றி, நாட்டின் நுகர்வுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான (நுகர்வு) விவசாயமாய் இருக் கின்றது. இருந்த போதிலும் நாட்டின் சுய தேவைகளுக்காக நம்மால் உற்பத்தி செய்யக்கூடிய சில அடிப்படை உணவு பதார்த்தங்களும் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். குறிப்பாக சிறு அளவிலான அரிசி மற்றும் பேரளவிலான தானியங்கள் இறக்குமதியையே சார்ந்தி ருக்கின்றது. கடந்த வருடம் அரிசிக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காய் 6000 மெற்றிக் டொன் அளவிலான அரிசியை பகிஸ்தானிடம் இருந்து கொள்வனவு செய்திருந்து குறிப்பிடத்தக்கது.

நெற்பயிர்ச்செய்கையிலும் தானிய ஊற்பத்தியிலும் தன்னிறைவாயிருந்த பண்டைய இலங்கையின் புராதன பயிர்செய்கை மேலைத்தேய வருகையின் பின்னர் வர்த்தக பயிர்ச்செய்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டமையால் விவசாய நடவடிக்கைகளில் புராதன பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்ததோடு பல்வேறு பிரச்சினைகளும் அதனூடாகத் தோற்றம் பெற்றன. சுதந்திரத்திற்கு பின்னர் அத்தகைய பிரச்சினைகளை கண்டறிந்து



அவற்றை தீர்த்து வைப்பதற்காக அரசாங்கம் எடுத்த முடிவுகள் அனைத்தும் பாதகமாகவே அமைய விவசாயம் மேலும் வீழ்ச்சிகாண தொடங்கியது.

கடந்த 10 ஆண்டுகளில் மாத்திரம் 55 வீத விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுள்ளதாக தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்நிலைக்கு விவசாயம் தள்ளப்பட்டிருப்பதற்கு எத்தனையோ காரணங்களை முன்வைக்க முடியும். அதிலும் குறிப்பாக - விவசாயிகளுக்கான உரிய சமூக மதிப்பினை பெற்றுக்கொள்ள முடியாமை. விவசாய சலுகைகள் வழங்கப்படாமை. தரமான தாய்த் தாவரங்களையோ விதைகளையோ குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருத்தல். நோய் தாக்கங்கள் முறையான நீர்ப்பாசன திட்டங்கள் இன்மை, விவசாயிகளை ஊக்கப்படுத்தவோ பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவோ அரசு தரப்பிலான விஸ்தரிக்கபட்ட வழிகாட்டிகளின் பற்றாக்குறை. சந்தைப்படுத்தலில் ஏற்படும் சிரமம். உரிய நிர்ணய விலையினை அறுவடைக்கு பெற்றுக் கொள்ள முடியாமை. உரம் பசளைகளை பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல். விவசாய கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல் போன்ற காரணிகளை விவசாய பின்னடைவுக்கான முக்கிய காரணிகளாக முன்வைக்கலாம்.

பாரியளவு விவசாயம் சில முன்னனி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற போதும் உணவுத்தேவைக்கான கேள்விக்கான நிரம்பலில் பெரும்பங்காக இருப்பது சிறு அளவிலான விவசாயத்தை மேற்கொள்ளக் கூடிய கிராமத்து விவசாயிகளே. இவர்களின் வாழ்வாதாரம் இன்று வரை ஒரு மேம்பட்ட நிலைநோக்கி நகராமையாலும் விவசாய உற்பத்திகளால் பெற்றுக்கொள்ளக்கூடிய லாபம் தங்கள் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய போதாமையினாலும் விவசாயத்தை கைவிட வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்றனர். குறிப்பாக இத்தகைய விவசாய கிராமங்களை யொட்டி சுத்தமான குடிநீர் வசதிகள் கூட இன்றளவிலும் அமைத்துக் கொடுக்கப் படாமை பாரியபிரச்சனையாகும்.

பயிர் செய்கைக்காக பயன்படுத்தப்படும் இரசாயன பசளைகளில் சில ( யூரியா ) நூற்றுக்கு சுமார் 62 விகிதமளவில் மண்ணினால் உறிஞ்ச முடியாது கரைந்து அருகிலிருக்கும் நீர்நிலை நிலைகளில் சேருகின்றன. இந்த பிரச்சினையை தீர்க்க பல்வேறு உத்திகள் பிற நாடுகளில் கையாளப்படுகின்ற போதிலும் இலங்கையில் இது குறித்து விவசாயிகளை விழிப்புணர்த்தவோ தீர்வுகளை மேற்கொள்ளவோ அரசாங்கம் இன்றளவிலும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதில் கசக்கும் உண்மை என்னவென்றால் அவ்வாறு வீணாவது தெரியாமல் மேலும் உரமிட்டும் விளைச்சல் கிடைக்காததை எண்ணி வானம் பார்ப்பதுண்டு பல விவசயிகள். மேலும் பயிருக்குறிய pH மட்டத்தை பற்றியோ அல்லது pH மட்டமென்றால் என்னெவென்பது பற்றியோக் கூட போதிய கல்வி இல்லாது மண்ணின் தன்மை அறியாமல் பயிர் செய்வதால் பேரளவிலான விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கவோ விவசாயக் கல்வியை வழங்கவோ அரச நிறுவனங்கள் அவ்வளவாய் பிரயத்தனங்களை மேற்கொள்வதில்லை.

சந்தைகளில் அரச அனுமதி பெற்றுள்ளதாய் சந்தைப்படுத்தப்படும் பல வகையான விதைகள் மற்றும் தாய் தாவர பாகங்கள் இருந்த போதிலும் அவற்றில் தரமான - முளைத்திறன் கொண்ட பீசங்களை பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அவ்வாறு தேர்ந்தெடுத்த பின்பும் அவற்றை கொள்வனவு செய்ய பாரிய அளவிலான பணத்தை செலவு செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு உட்படுத்த பட்டுள்ளனர். இத்தோடு நின்று விடுவதில்லை அவ்வாறு பெற்றுக்கொண்ட விதைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளவாறு விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில், வியாபாரிகளை வினவும் போது ஹைபிரிட் விதை, இந்நிலத்திற்கிது பொருந்தாதென்று சாக்குகள் சொல்லி அலைக்களிக்கும் சம்பவங்களை நம்மால் காண முடிகின்றது. இதனால் இப்பிரதேசத்திற்கு இந்த வகை பொருந்துமென்று அரசு பரிசீலனைகளை மேற்கொண்டு தேர்ந்தெடுத்த வணிகர்களுக்கு அனுமதியளித்து விற்பனை செய்ய நடவடிக்கைகளை மேற்றகொள்ள வேண்டும். மேலும் சந்தையில் காணப்படுகின்ற விதைகளில் பெரும்பாலானவை வெளிநாட்டு இறக்குமதிகளா கவே உள்ளன. இதற்கு மாற்றாக அரச நிறுவனமொன்றினாலோ அரச அனு மதி பெற்ற தனியாரினாலோ குறித்த தரமான பீசங்கள் உற்பத்தி செய்யப் படும் போது உள்ளூர் விவசாயிகளினால் குறைந்த விலைக்கு அவற்றை பெற்றுக் கொள்ள முடிவதுடன் வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுக்க முடியும். மேலும் இறக்கு மதிக்காக ஒதுக்கப்படும் பணத்தினை குறித்த தயாரிப்புக்கு பயன்படுத்த முடிவதுடன், மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் சோளப்பயிர்களை தாக்கும் பீடைப் புழுவின் ஆதிக்கம் கட்டுப் பாட்டைக் கடந்து பெருமச்சுருத்தலாய் அமைதிருந்தை நாமனைவரும் அறிந்திருந்தோம். இவாறான நிலைமையில் குறித்த நோய்க்காரணியினை கண்டறியவும் நோய் நிவாரணங்களை கூடிய விரைவில் பெற்றுத்தருவதற்கும் ஆராய்ச்சி நிறுவனங்களை நேர்த்தியாகவும் வெகுவாக செயற்படு மளவிலும் நடாத்தி செல்ல வேண்டும். விவசா யிகளிடம் இவ்வாறான நிலைமைகளின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நோய் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை கருத்த ரங்குகள் போன்றவற்றின் ஊடாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சீரான நீரோட்டங்களை கொண்ட நதிகளையும், பொய்க்காத பருவ மழையையும், சுமார் 12,000 வாவிகள் உள்ளடங்கலாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்நிலைகளை யும், 272 நீர்வீழ்சிகளை உள்ளடக்கிய 12 பிரதான நதிகளையும் கொண்டு பண்டை காலந் தொட்டே நீர்பாசனத்தில் மேம்பட்டு விளங்கி உலகிற்று வாவிகள் சார் நீர் பாசன தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்திய பெருமைக்குரிய இலங்கையில் இன்று விவசாயத்திகோ குடிநீருக்கோ கைத்தொழில் செயற்பாடுகளுக்கோ போதியளவு நீர் இல்லாது அவஸ்தை படும் சந்தர்ப் பங்களை செய்திகளுடாகவும் தரவுகளினூடாகவும் படிக்க நேரிடும் போது வாய் பொத்தி நகைக்கத் தோன்றுவது இயல்பான நிலை தான்.

கிட்டத்தட்ட 5,583 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மொரகஹகந்த அணைக்கட்டு போன்ற பாரிய அளவு நீர் பாசன திட்டங்கள் செயட்படுத்த பட்டாலும், அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட லாபமோ அனுகூலமோ கிடைக்க பெறுகின்றதா அல்லது கிடைக்கப் பெறுமா என வினவினால் இல்லை என்பது தான் பதில். இந்த மொரகஹகந்த திட்டத்தித்தின் ஊடாக லாபமோ வருமானமோ கிடைக்க வேண்டுமென்றால் குறித்த அணைகட்டு வருடத்தில் 11 முறையாவது நிரம்ப வேண்டும் ஆனால் மாறாக வருத்தில் இரண்டு முறைகள் மாத்திரமே அணைக்கட்டு நிரம்புவதாகவும், இதனை நிரப்புவதற்காக மேலும் நதிநீர் இணைப்பு திட்டங்களுக்கு பிரயோசனமற்ற வகையில் நிதி ஒதுக்கிடுவதாகவும் மக்கள் விடுதலை முன்னனியின் தலைவர் அனுரகுமார திஸானாயக்க அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தார். (09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையின் பொருளாதாரத்தை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறாக செலவிடும் நிதியினை புராதன இலங்கையின் வாவிகளையும் கால் வாய்களியும் புணரமைக்க ஒதுக்கும் பட்சத்தில் அவற்றின் மூலம் பாரிய அளவிலான நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

வருடத்தில் ஒரு குறித்த அறுவடைக்கு பெரிய லாபத்தை பெற்றுக்கொள்கின்ற விவசாயிகள் அதே ஆண்டில் அதே பயிர் மீதான இரண்டாம் அறுவடையில் அளப்பரிய நட்டத்தை ஈட்டுவது உலகில் வேறெங்கிலும் இல்லாத வண்ணம் இலங்கையில் காணப்படுகின்றது. இதை நிவர்த்தி செய்வதற்கான எந்த ஒரு நடவடிக்கைகளுக்கும் உற்பத்திகளுக்கான நிர்ணய விலைகளை பெற்றுத்தருவதற்கும் இன்று வரையில் அரசாங்கம் பெரிய அளவில் முன்வரவில்லை. உதாரணமாக இலங்கையில் வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பிரதான இடங்களாக யாழ் மற்றும் ஹம்பந்தொட்டை சார் பிரதேசங்களை குறிப்பிடலாம். இந்த பிரதேசங்களில் முறையான திட்டங்களை உருவாக்கி முன்னறிவிப்புக்களோடு இந்த போகத்தில் இந்த பிரதேசத்தில் (யாழ்) மாத்திரம் வெங்காய உற்பத்தியை மேற்கொள்ளவும், மற்ற பிரதேசத்தில் (ஹம்பாந்தோட்டை) மாற்றுப் பயிரை பயிர்செய்கையை மேற்கொள்ளவும், மற்ற போகத்தில் அதை சுழற்சி முறையின் மூலம் நடாத்தி செல்லவும் முடிகின்றபோது நிர்ணய விலையை குறித்த உற்பத்திக்கு பெற்றுக்கொடுக்க முடிவதோடு, அறுவடையை வீணாகாது தடுக்கவும் முடியும். அதாவது சில சந்தர்ப்பங்களில் மிகை உற்பத்திகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் குறை உற்பத்திகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுவதால் நிர்ணய விலையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களுக்கு உற்பட வேண்டியுள்ளது. மிகை உற்பத்தியின் போது தேவைக்கதிக உற்பத்திகள் களஞ்சிப்படுத்த முடியாமல் வீணாவதும், குறை உற்பத்தியின் போது நுகர்வுக்காக இறக்குமதி செய்யவும் நேரிடுகின்றது.

அறுவடையின் பின்னர் சந்தைப்படுத்தப்படும் உற்பத்திகளில் 35 விகிதமளவிலான உற்பத்திகள் இடைத்தரகர் ஊடாக விவசாயியினிடமிருந்து வியாபாரிக்கு செல்ல எடுக்கும் நேரத்திலும் அதற்கு பின்பான விநியோக நடவடிக்கையின் போதும் வீணாகுவதாய் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அந்த 35 விகிதமளவிலான பண்டங்களை களஞ்சியப்படுத்தவோ, வீணாவதை தடுக்கவோ போதுமான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. கூடவே இடைத்தரகர் முறையை ஒழிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக நன்மைகளை பெற்றுத் தரவும் முடியும். வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து பண்டங்களை பெற்றுக்கொள்ளவும் விலையை விட நுகர்வோருக்கு அவற்றை விநியோகிக்கும் போது மிகவும் அதிகமான விலைக்கு விற்கப்படுவதால் நுகர்வோருக்கும் விவசாயிகளுக்குமிடையிலான லாபத்தை விட வியாபாரிகளின் லாபம் அதிக அளவில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த கால அவசர தீர்மானங்கள் போலல்லாது விவசாயிகளுக்கு கிடைக்கப்பெறும் உரங்களையும் அவற்றிற்கான மானியங்களையும் சிறந்த முறையில் பெற்றுத்தருவதோடு, நாமனைவரும் சுகாதாரமான நச்சுத்தன்மையற்ற உணவினை நுகர வேண்டும் அதற்கு கரிம விவசாயம் உறுதுஇணையாய் அமையும். இருப்பினும் படிப்படியாக கரிம விவசாயத்திற்கு மாறுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதோடு இரசாயன பசளைகளுக்கு மாற்றாக சேதன பசளைகளை குறைந்த விலையில் பெற்றுத்தரவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில், வங்கித்துறையானது விவசாயத்திற்காக 10 சதவீத கடன் ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும். மேலும் வங்கித்துறையும், இலங்கை மத்தியவங்கியும் பெருநகரப்பகுதிகளில் திறக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட வங்கிகளுக்குமான இரண்டு கிளைகளை விவசாயம் சார் கிராமப்பகுதிகளில் நடாத்தி செல்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது விவசாயிகளுக்கு அதனூடாக பெருமளவிலான அனுகூலங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை

517,00 சதுர கிலோ மீட்டர் பிரத்தியேக பொருளாதார வலயத்தையும் 21,500 ச.கி.மீ கடல் நீர் ஏரிகள், கழிமுகங்கள் மற்றும் உள்ளூர் நீர் நிலைகளையும் 5,200 ச.கி.மீ ஆளவிலான செயற்கை நீர் நிலைகளையும் கொண்டிருக்கிறது இலங்கையின் நீர் வளம். அண்மைய 75 ஆண்டுகளாய் பாரியளவு வளர்ச்சிக்கண்டு வரும் இலங்கையின் மீன்பிடியானது சுமார் 200 ஆண்டுப் பழமையான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. கடற்கரையோர மீன்வளர்ப்பு 1980ஆம் ஆண்டு காலகட்டங்களில் இறால் வளர்ப்புடன் ஆரம்பமானதுடன், கடல் நீர் வளர்ப்பு 2010இன் பின்னர் அண்மைக்கலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. துரித அபிவிருத்தி கண்டுவரும் மீன்பிடித் துறையின் வளர்ச்சியானது மொத்த உள்ளாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்காமலில்லை. 2020 ஆம் ஆண்டு 215 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதியினை ஈட்டித்தந்ததுடன் 2021ஆம் ஆண்டு 318 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வளர்ச்சி கண்டிருந்து. பண அறவீட்டின் மூலமல்லாது நோக்குமிடத்தில் 2020ஆம் ஆண்டு 56.176மெற்றிக் டொன்னாக இருந்த ஏற்றுமதி 2021ஆம் ஆண்டு சுமார் 44 விகித்தால் அதிகரித்து 85.809 மெற்றிக் டொன்களாக இருந்தது.

இருந்த போதிலும் உள்நாட்டு தேவைக்கான முக்கிய புரதமாய் அமைகின்ற மீன்களில் 35 விகிதமானவை வெளிநாட்டிலிருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றது. பொதி செய்ய்பட்ட ரின் மீன்கள் முற்றிலுமாக வெளிநாடுகளிலிருந்தே கொள்வனவு செய்யப்படுகிறது. நேராகவோ மறைமுகமாகவோ நாட்டின் வேலைவாய்ப்பில் 4 இற்கு மேலாக பங்காற்றும் இத்துறையோடிணைந்து நம்பி தங்கள் வாழ்வாதாரங்களை மேற்கொள்ளும் குடும்பங்கள் பலவற்றின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வது கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. அதிக லாபத்தை பெற்றுக் கொள்ள முடிகின்ற போதிலும் முதலாலிகளும் வியாபாரிகளும் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு அடிமட்ட ஊழியர்களின் வருமானம் இருப்பதில்லை.

மேலும் இவ்வாறான அடிமட்ட ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகளையும், வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதன் மூலம் இன்னும் அதிக உழைப்பினையும் பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் மேம்பட்ட தொழிநுட்பங்கள் இலங்கையை பொறுத்த வரையில் அரிதாவே காணப்படுகின்றது. இவ்வாறான தொழிநுட்பம் சார் உபகரணங்களையும் கருவிகளையும் இறக்குமதி செய்து மீனவர்களுக்கு பெற்றுத்தரும் போது அதிகளவிலான அறுவடைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மீன் பிடித்தற்கு பின்னரான தர இழைப்பை குறைக்கவும் அதிகரித்த பெறுமானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பனிக்கட்டி தொழிற்சாலைகளையும். களஞ்சிய சாலைகளையும் நிறுவுவதாலும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிப்பதன் மூலம் கழிவுகளை குறைத்துக் கொள்ளவும் தரமான பண்டங்களை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் முடிவதோடு தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். களஞ்சியசாலைகள் விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் போமலின் போன்ற தீமை விளைவிக்கும் பதார்த்தங்களிலிருந்தும் விடுபட முடியும்.

நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பும் தற்காலத்தில் வெகு வளர்ச்சி கண்டு வருவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் அது சார் துறைகளில் இலங்கை இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதனால் அது தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளையும் கற்கை நெறிகளையும் கொண்டுவர முடியும்.

சட்டவிரோத மீன்பிடிப்பினால் எதிர்கால மீன் வளம் அருகி வருவதாலும், பவளப்பாறைகள் மற்றும் அருகி வரும் மீனினங்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதாலும் அது தொடர்பாக கடுமையான சட்டங்களை அமுல்படுத்தவும் செயற்படுத்தவும் முன்வருவதோடு இந்திய தமிழகத்திலெல்லம் அதிக லாபமீட்டற் பொருட்டு வளர்ந்து வரும் கடல் நீர் மீன் வளர்ப்புகளை ஊக்கப் படுத்துவதால் அதிக பொருளாதார நன்மைகளை ஈட்ட முடியும்.

### சுற்றுலாத்துறை

பூகோல ரீதியில் தனித்துவமான அமைப்போடு வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்க்கும் இலங்கை 2019 இற்கு முன்னர் 2மில்லியனுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையை பதிவு செய்திருந்ததோடு 6 மில்லியனுக்கும் அதிகமான உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் கவனத்தையும் பெற்றிருந்தது.

மொத்த உள்பநாட்டு உற்பத்தியில் 12 சதவீத பங்கை சுற்றுலாத்துறை மற்றும் அது சார்ந்தவைகள் பூர்த்தி செய்கின்றன. அதாவது கிட்த்தட்ட 11 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான நிதியினை சுற்றுலாத்துறை பெற்றுத்தருகின்றது. நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் 5.9 வீதத்தினை சுற்றுலாத்துறை பெற்றுக்கொடுத்திருக்கின்றது. நாட்டின் வாளர்ச்சிக்கு இவ்வாறு பாரிய பங்காற்றும் சுற்றுலாத்துறை 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு சரிவடைய தொடங்கியதுடன் தொடர்ந்து வந்த கொவிட் தொற்றின் பின்னர் அதிகளவில் வீழ்ச்சிக்காணத் தொடங்கியது. கூடவே ரஷ்ய-யுக்ரைன் யுத்தமும் வீழ்ச்சிக்கு மறைமுகமாக பங்கு வகிக்கின்றது. இவ்வாறு அபிவிருத்தியின் முதுகெலும்பாகவும், அந்நிய செலவாணிகளையும் டொலரினையும் பெருமளவில் நாட்டினுள் கொண்டு சேர்க்கும் சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியோடு கூடவே சுற்றுலாத் துறை சார்ந்த அந்நிய முதலீடுகளும் பின்வாங்க, அடிவாங்கத்தொடங்கிற்று இலங்கை பொருளாதாரம்.

மீண்டும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியின் மீது ஆளமாய்ச் சென்று அவதானம் செலுத்த வேண்டும். தொடர் அனர்த்தங்களினாலும் போராட்டங்கள் நிலவுவதாலும் பொரு ளாதர நெருக்கடியினாலும் இலங்கை மீதான நம்பகத்தன்மை மற்றும் எண்ணப்பாடுகள் சர்வதேச அரங்கில் எதிர்மறையாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. முதலில் நாட்டின் சமாதானத்தை நிலை நிறுத்தி கரைந்துக் கொண்டிருக்கும் நம்பகத்தன்மையிலும் சமாதனத்தினதும் இஸ்திர தன்மையினை நிலை நாட்ட வேண்டிய தேவை அல்லது பொறுப்பு அத்தனை இலங்கையர் கையிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

பல சந்தர்பங்களில் சுகாதாரமன உணவுகளை பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல், வெளிநாட்டு பார்வையாளர்களுக்கான அனுமதி கட்டணங்கள் அதிகமாக அறவிடப்படுகின்றமை, சீரமைக்கப்படாத பாதைகள், சுற்றுலாத் துறை சார் மோசடிகள், வழிகாட்டிகளுக்கான பற்றாக்குறை போன்றவற்றில் பல இடையூறுகள் காணப்படுகின்றன.

நெடுநீளப்பயணங்களை பயணிகள் மேற்கொள்ளும் போது சிற்றுண்டி அல்லது பிரதான உணவுத்தேவையானது அத்தியாவசியமான ஒன்றாகும். தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஊடகங்களைத்தேடும் போது ஒரு தரமான உணவகத்தை தேடி அடைவதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றது. அவ்வாறு பாதையோரங்களில் அரிதான சில உணவகங்கங்களை நாடும் போதும் அவற்றில் பெரும்பாலானவை லாபங்களை நோக்காக கொண்டு சுகாதார நெறிமுறைகளை பின்பற்றுவது கிடையாது. இவ்வாான நிலைகளில் அரச சுகாதார உத்தியோகஸ்தர்களின் துணையோடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கூடவே புகையிரதங்களில் சிற்றுண்டிசாலைகள் முறையாக பேணப்படாததை கண்ணுற்றிருக்கிறேன். பேருந்து பயணங்களின் போது தேனீர் இடைவேளைக்காக சாரதிகளினதும் நடத்துநர்களினதும் தனிப்பட்ட தேவைப்பூர்த்திக்காக அடிப்படை உணவு பாதுகாப்புகளைக் கூட பேணாத உணவகங்களில் பேருந்துகள் தரிக்கப்படுவதுண்டு.

பெரும்பாலான சுற்றுலாத்தலங்களில் பார்வையாளருக்கான பற்றுச்சீட்டோ, கட்டணங்களோ அறவிடப்படுகின்றது. இவ்வாறு அறவிடும் போது பொதுவாக சுயதேசிகளுக்கு குறைவாகவும் வெளிநாட்டவர்க்கு அதிகமாகவும் அறவிடப்படுவதுண்டு. இருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் சில இடங்களில் வெளிநாட்டவர்க்கென அறவிடப்படும் கட்டணத்தொகைகாள் மிக அதிகமாக காணப்படுகின்றது. இதனால் அதிகளவிலான பணத்தினை செலவளிக்க வேண்டியிருக்கின்றது.

பல இடங்களில் சுற்றுலா தலங்களுக்கு பிரயாணங்களை மேற்கொள்ளும் போது சீரற்ற பாதைகளில் பயணிக்க நேரிடுவதால் குறித்தப் பயணம் கடுமையாக அமைந்து விடுகின்றது. குறிப்பாக மலைநாட்டு பிரதேசங்களின் இயற்கை அழகின் பால் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் ஈர்க்கப்படுகின்ற போதும் குறிப்பிட்ட இடத்தினை அடைவதற்கான சீரான பாதைகள் இல்லாததால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இவ்வாறான பாதைகளை சீரமைத்துக்கொடுப்பதன் மூலம் அதிகலவிலான பிரயாணிகளை தக்க வைத்துக் கொள்ள முடிவதோடு அப்பிரதேச மக்களுக்கும் அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒழுங்கமைக்கப்பட்ட கழிவகற்றல் முறைகளோ உரிய இடங்களில் குப்பைத்தொட்டிகளையோ காட்சிப்படுத்தாத போது சூழல் மாசடைவை தடுக்கமுடியாமல் போகின்றது. இதனால் அவ்விடத்தின் பிரத்தியேக எழில் கெடுவதுடன் துர்நாற்றம் மற்றும் சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. ஆகவே சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இத்தகைய இடங்களை சுத்தமாக பேணுதல் அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

சுற்றலா வழிகாட்டிகளுக்கான கற்கை நெறிகளை ஏற்படுத்திக்கொடுத்து வேலைவாய்ப்புகளை விஸ்தரிக்கலாம். இதனூடாக வழிகாட்டிகளுக்கென அதிக பணம் ஒதுக்கவேண்டிய தேவையிலிருந்து சுற்றுலா பிரயாணிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். மேலும் வெளிநாட்டவர்களிடம் பொய்யான வகையில் பண்ட விலையை அதிகரித்து முதல் பறித்தல், முச்சக்கர வாகனங்கள், டக்சிகளுக்கு அதிகளவான கட்டணங்களை அறவிடுதல், பாலியல் தொல்லைகளுக்கு உற்படுத்துதல், கொள்ளைகள் போன்ற குற்ற செயல்களை முற்றிலும் ஒழிக்க முற்பட வேண்டும்.

### போக்குவரத்து மற்றும் பாதை அபிவிருத்தி

எந்தவொரு துறையை மேம்படுத்தவும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லவும் பாதைகளும் போக்குவரத்தும் பொருளாதார சக்கரத்தின் அச்சாணிகளாய் அமைகின்றன. எந்தவொரு மூலப்பொருளை கொண்டு செல்வதற்கும் பொருட்களை விநியோகிப்பதற்கும் போக்குவரத்து முக்கிய பங்காற்றுகின்றது.

இலங்கையை பொருத்த மட்டில் தரை, வான், நீர் மூலமான மார்கங்களின் ஊடாக போக்குவரத்து நடைபெறுகின்ற போதிலும் தரைவழி போக்கு வரத்தானது அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. 12,537.247கி.மீ அளவிலான பெருந்தெருக்களை கொண்டுள்ளதோடு 312.586கி.மீ நீளமான அதிவேக பாதையை பொறுப்பேற்று நடாத்தி பராமரித்து செல்கிறது. கூடவே பொது வாகன பயன்பாட்டில் புகையிரத போக்குவரத்தும் பிரதானமாக தொழிற்படுவதுடன் புகையிரத திணைக்களத்தின் கீழ் இது இயங்குகின்றது. பாரிய அளவிலான பாதை அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்கின்ற போதிலும் பல கிராமங்களில் குன்றும் குழியுமாக இருக்கும் பாதைகளையும் நம்மால் காணமுடிகின்றது.

போக்குவரத்துத் துறையில் கட்டியெழுப்ப வேண்டிய விடயங்களை பற்றிப் பேசும் போது, பொது வாகன போக்குவரத்தை இன்னும் முடியுமான அளவு மேம்படுத்தல் வேண்டும். குறிப்பாக சிறந்த தரத்திலான, நம்பகத்தன்மையுடன், சௌகரியமாய் பயணங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் பொது போக்குவரத்தை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்து போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த முடியும். கூடவே இன்றய பூதமாய் உருமாறி நிற்கும் எரிபொருள் பிரச்சனைக்கு கனிசமான அளவு தீர்வு கிடைக்கும். இதன் போது எரிபொருள் கொள் வனவிற்கான பணத்தை சேமிக்க முடிவதுடன் சூழலையும் பாதுகாக்க முடியும்.

முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு குறைந்த வட்டிக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து நான்கு சக்கர வாகனங்களுக்கு மாற்றிக்கொள்ள உற்சாகம் அளிப்பதன் மூலம். அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி வீதி விபத்துக்களையும் குறைத்துக் கொள்ள முடியும்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E


04. **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்
(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்
(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.
(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை
(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை
(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

கல்வி tv CHANNEL-1

**07.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**07.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 3 வயதுக் குழந்தைக்கு முன்னால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான இளம்தாய்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

அம்பாறை, ஓக. 20

தனது 3 வயது குழந்தைக்கு முன்னால் இளம் தாய் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட மாளிகைக்காடு கிழக்குப் பகுதியில் பதிவாகியுள்ளது.

கடந்த ஜூலை 3ஆம் திகதி 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை கணவன் வீட்டில் இல்லாதவேளை 3 வயது பிள்ளை பார்த்திருக்க அயலவர் ஒருவர் கத்தி காட்டி அச்சுறுத்தி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் சுமார் 1 வயது மற்றும் 3 வயது பெண் குழந்தைகளின் தாய் என்பதுடன் மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்து வந்துள்ளார்.

தனது வீட்டில் கணவன் இல்லாத நிலையில் குறித்த பெண் சம்பவ தினமன்று தங்கி இருந்துள்ளார். இரவு 7 மணியளவில் அத்துமீறி பிரவேசித்த நபர் ஒருவர் 3 வயதான தனது மகள் பார்த்துக் கொண்டிருந்தவேளை கத்தி மூலம் அச்சுறுத்தி வலுக்கட்டாயமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதாகவும் அபயக்குரல் எழுப்பியும் எவரும் தன்னை காப்பாற்றவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தன்னை துஷ்பிரயோகப்படுத்திய நபர் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சில பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் வழங்கிய முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட காரைதீவு பொலிஸ் நிலையம் பாதிக்கப்பட்ட பெண் குறித்து நீதியான நடவடிக்கை எடுக்க தவறியதால் அப்பெண் தனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறு கோரி மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சென்று தஞ்சமடைந்துள்ளார்.

அத்துடன் வலுக்கட்டாயமாக தன்னை பாலியல் துஸ்பிரயோகம் செய்த நபரிடம் இருந்து பாதுகாப்பு பெற்று தருவதுடன் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறிய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவில் இளம் பெண் முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டிற்கமைய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவினால் சம்பவம் தொடர்பாக விசாரணை அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்தேக நபரிடம் கஞ்சா!

அம்பாறை, ஓக. 20

பொலிஸாரினால் கைதான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் வசமிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகளின் அடிப்படையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரை பிடிப்பதற்காக அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை சந்தேக நபர் கைதானார்.

நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு நீண்ட காலமாக தலைமறைவாக இருந்த மருதமுனை வி.சி வீதியை சேர்ந்த 43 வயதான சந்தேக நபரே கைதானார். அவர் வசம் 1200 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது. (அ)

# அனுமதி பத்திரமின்றி மீட்கப்பட்ட 4 மாடுகள் தொடர்பில் விசாரணை

அம்பாறை, ஓக. 20

அனுமதி பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்டு மீட்கப்பட்ட 4 மாடுகள் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பகுதியினூடாக மாடுகள் கடத்தப்படுவதாக பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலாலுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இரு சந்தேக நபர்களுடன் 1 எருமை மாடு உள்ளடங்கலாக 4 மாடுகள் இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கை கடந்த 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்களான களுவாஞ்சிக்குடி பொலிஸ் எல்லைக்குட்பட்ட போரைதீவு பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 52 வயதுடையவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் குறித்த 4 மாடுகள் தொடர்பில் தொடர் விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணம் கையளிப்பு

அம்பாறை, ஓக. 20

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு 2.5 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் தனியார் ஒருவரினால் அன்பளிப்பு செய்யப்பட்டன.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பொது மக்களின் பங்களிப்பை பெறுவது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸினாலும் வைத்தியசாலைகளினாலும் உதவிகள் கோரப்பட்டதற்கமைவாக ரெலிகொம் பட்டயக்கணக்காளர் எம். வை. இப்றாஹீம் மர்ஹூம்களான தனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக இந்த உபகரணங்களை வழங்கினார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலை வைத்திய அதிகாரி மருத்துவர் சனூஸ் காரியப்பரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடாதிபதியாக ஹலீம்

அம்பாறை, ஓக. 20



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் இரண்டாவது பீடாதிபதியாக பேராசிரியர் எம். ஏ. எல்.ஏ. ஹலீம் ஏகமனதாக தெரிவானார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் பொறியியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஒன்றுகூடலின் போதே பேராசிரியர் ஹலீம் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கல்முனையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் மறைந்த மொஹமட் அப்துல் லத்தீப் மற்றும் கதீஜா உம்மா ஆகியோரின் மூன்றாவது மகனாவார். பேராசிரியர் ஹலீம் கல்முனை சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 1 முதல் 10 வரை (1970-1980) பயின் றார். அம்பாறை மத்திய கல்லூரியில் (தற்போது அம்பாறை டி.எஸ். சேனா நாயக்க தேசிய பாடசாலை) தரம் 11-12 கல்வியைத் தொடர்ந்தார். கணிதத்துறையில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் சிறப்புப் பட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்தார். (அ)


# தொல்பொருள் அகழ்வுப்பணி அறிக்கை கிழக்கு மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிப்பு

திருமலை, ஓக. 20

மத்திய கலாசார நிதியத்தால், மட்டக்களப்பு, நெளுகல தொல்பொருள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின் அறிக்கை, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோரிடம் வழங்கினார்.

தொல்பொருள்தளத்தில் உள்ள பழைய கட்டடங்கள், தொட்டிகள், தூபிகள் மற்றும் ஆசனகாரங்கள் உட்பட தொல்பொருள் மதிப்புள்ள பல தகவல்கள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.



கோறளைப்பற்று மேற்கு பிராந்திய செயலகத்துக்குட்பட்ட வடமுனை கிராம சேவை களத்தில் அமைந்துள்ள நெலுகல தொல்பொருள் தளம், 2,000 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அறுவடைக்காக டீசல் வழங்க புதிய திட்டம் நடைமுறையில்

திருமலை, ஓக. 20

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்குத் தேவையான டீசலை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தின்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்டத்தில் மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறிபுர ஆகிய பிரிவுகளில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

விவசாயிகளுக்கு அறுவடைக்கான டீசல் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் என்றவாறு சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலின்படி, பிரதேச செயலாளர்கள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் இச்செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றது.

அதேபோல் விதைப்பு நடவடிக்கைகள் பிந்தி ஆரம்பிக்கப்பட்ட பிரதேசங்களில் நெல் அறுவடை தற்போது தொடக்கம் செப்ரெம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கூடுதலாக நடைபெறும் என்பதனால் அதற்கான எரிபொருளை கிரமமான முறையில் விவசாயிகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு, அறுவடைக்கான டீசல் தேவைப்பாடு தொடர்பான பட்டியல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலிற்கேற்ப விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் செயற்பாடு பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# சீனாவில் திடீர் வெள்ளம்! 16 பேர் பலி; 36 பேர் மாயம்



பீஜிங், ஓக. 20

சீனாவில் கன மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில், 16 பேர் உயிரிழந்தனர் 36 பேர் காணாமல்போயுள்ளனர். சீனாவில் கடந்த மாதம் முதல் கன மழை பெய்து வருகிறது.

வடமேற்கு கிங்காய் மாகாணம், டத்தோங் ஹூய் நகரம் ஆகிய பகுதிகளில் கன மழை காரணமாக, சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், ஆறுகளில் வெள்ளம் பாய்ந்து பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், 16 பேர் உயிரிழந்தனர். 36 பேர் காணாமல் போயுள்ளனர். இதையடுத்து, 2,000க்கும் மேற்பட்ட மீட்பு படையினர், 160க்கும் மேற்பட்ட ராணுவ வாகனங்களுடன் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்கின்றது பிரிட்டன்

## தேசிய சுகாதார சேவை கூட்டமைப்பு கூறுகிறது

லண்டன், ஓக.20

**பிரித்தானியா மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்கின்றது என தேசிய சுகாதார சேவை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**



எரிசக்தி விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மேலும் நடவடிக்கை எடுக்காவிட்டால், அதிகரித்து வரும் மக்கள் நோய்வாய்ப்படுவார்கள் மற்றும் அவர்களின் உடல்நலம் மோசமடைவதைக் காண்பார்கள் என தேசிய சுகாதார சேவை குறிப்பிட்டுள்ளது.

சுகாதார நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு, பலர் தங்கள் வீடுகளைச் சூடாக்க உணவைத் தவிர்ப்பது அல்லது குளிர், ஈரமான சூழ்நிலையில் வாழ்வதற்கு இடையே மோசமான தேர்வை எதிர்கொள்வார்கள் என்று தேசிய சுகாதார சேவை மேலும் கூறியது.

ஆனால், தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தேசிய சுகாதார சேவையை ஆதரிப்பதாகவும் அமைச்சர்கள் கூறினர். இந்த இலையுதிர் காலத்தில் எரிசக்தி கட்டணங்களைச் செலுத்த உதவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 400 பவுண்டுகள் செலுத்துதல்கள் இதில் அடங்கும்.

இருப்பினும், அமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில், தேசிய சுகாதார சேவைத்தலைவர்கள், வேகமாக உயரும் எரிசக்தி விலைகள், பிற வாழ்க்கைச் செலவு அழுத்தங்களுடன், தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் இன்னும் சாத்தியமற்ற தேர்வுகளை எதிர்கொள்வார்கள் என்று கூறினர். (அ)

# 10 குழந்தை பெற்றால் பரிசு!

## ரஷ்ய அதிபர் அறிவிப்பு




மொஸ்கோ, ஓக. 20

ரஷ்யாவில் சரிந்து வரும் மக்கள் தொகையை மீண்டும் அதிகரிக்க, 10 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கு 10 லட்சம் ரூபிள் (ரூ.25 லட்சம்) வெகுமதியுடன் கூடிய 'அன்னை நாயகி' என்ற விருதை அளிக்கவிருப்பதாக ஜனாதிபதி விளாடிமீர் புடின் அறிவித்துள்ளார்.

10 குழந்தைகளும் உயிரோடு இருந்து, 10 ஆவது குழந்தைக்கு 1 வயது நிறைவு பெறும்போது தாய்க்கு இந்த விருது அளிக்கப்படும். 2 ஆம் உலகப் போரின்போது ஸ்டாலின் அறிமுகப்படுத்திய இந்த விருது, தற்போது மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸாருக்கு அழைப்பு எடுத்த குரங்கு குட்டியின் சுட்டித்தனம்



பாஸோ ரோபில்ஸ், ஓக.20

அமெரிக்காவில் குரங்கு குட்டி ஒன்று பொலிஸாரின் அவசர எண்ணுக்கு கைத் தொலைபேசியில் இருந்து அழைப்பு எடுத்த சம்பவம், சுவாரசியத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வனவிலங்கு பூங்கா உள்ள குரங்குக் குட்டியே இவ்வாறு அழைப்பு எடுத்துள்ளது.

பூங்காவில் இருந்து பொலிஸாரின் அவசர உதவி எண்ணான 911 இற்று கடந்த 13ஆம் திகதி கைத்தொலைபேசியில் இருந்து அழைப்பு சென்றுள்ளது. ஆனால், உரையாடலுக்கு முன்னரே அழைப்பு துண்டிக்கப்பட்டது.

பொலிஸார் தொலைபேசி அழைப்பை சோதனை செய்ததில், அது பாஸா ரோபில்ஸில் உள்ள வனவிலங்கு பூங்கா ஒன்றிலிருந்து வந்துள்ளதைக் கண்டறிந்தனர். இதையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர். ஆனால், இங்கிருந்து "யாரும் அழைப்பு எடுக்கவில்லை" என ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, யாரேனும் குறும்புக்காக போன் செய்தனரா என தொலைபேசி எண்ணை "டிராக்" செய்த போது, அங்குள்ள "ரூட்" எனப் பெயரிடப்பட்ட குரங்கு குட்டி ஒன்றின் கையில் கைத்தொலைபேசி இருந்தமை தெரிய வந்தது. அங்கிருந்த வாகனம் ஒன்றில், கேட்பாரற்று கிடந்த கைத்தொலைபேசியை எடுத்த குரங்கு, 911 எண்ணை தெரியாமல் அழுத்தியுள்ளது.

இதையடுத்து, அசம்பாவிதம் ஏதும் நடக்கவில்லை என்பதையறிந்த பொலிஸார் நிம்மதியுடன் திரும்பினர். "கபுச்சின் வகையைச் சார்ந்த இந்த குரங்குகள், எல்லாவற்றிலும் மிகவும் ஆர்வம் கொண்டவை. கையில் ஒரு பொருள் கிடைத்தால், அதில் என்ன இருக்கிறது, என்ன செய்யலாம் என யோசிப்பவை. மேலும், மிகுந்த சுட்டித்தனம் கொண்டவை" என, வனவிலங்கு பூங்கா நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# குரங்கு அம்மை நாய்க்கு தொற்று

## எச்சரிக்கிறது உலக சுகாதார அமைப்பு

பாரிஸில் குரங்கு அம்மை நோயாளிகள் இரு வரது வளர்ப்பு நாய்க்கு அந்த வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.குரங்கு அம்மை வைரஸ் மனிதரில் இருந்து விலங்குகளுக்கு - குறிப்பாக நாய்க்குத்-தொற்றியிருப்பது இதுவே முதல் முறை என்று உலக சுகாதார அமைப்பின் குரங்கு அம்மை தொடர்பான தொழில்நுட்ப இயக்குநர் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

தொற்றாளர்கள் வளர்ப்புப் பிராணிகளிடம் இருந்தும் ஏனைய விலங்குகளிடம் இருந்தும் முற்றாக விலகி இருக்குமாறு சுகாதார நிறுவனம் கேட்டிருக்கிறது.

பொதுவாக வைரஸ் இனங்கள் விலங்குகளில் தொற்றுகின்ற போது ஆபத்தான புதிய பிறழ்வுகளை - மாறுதல்களை எடுக்கின்றன.

எனவே விலங்குகள் குறித்த விழிப்பு அவசியம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் புதியதொரு வாழ்க்கைச் சூழலுக்கு மாறும் போது அதற்கு ஏற்ப அது புதிய இனமாகத் தன்னை மாற்றிக் கொள்கிறது.வைரஸ் வீட்டு விலங்குகளை விட வெளியே ஏனைய உயிரினங்களில் தொற்றுவதே மிக ஆபத்தானது - என்று சுகாதார நிறுவன அதிகாரி கூறியுள்ளார்.

பாரிஸில் வசிக்கின்ற ஆண் ஒரினச் சேர்க்கத் தம்பதிகள் இருவரது இத்தாலி இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்றுக்கே குரங்கு அம்மை வைரஸ் தொற்றியுள்ளது.

அவர்கள் இருவரும் கடந்த ஜூனில் தொற்றுக்கு இலக்காகி இருந்தனர். உலகின் பல நாடுகளில் குரங்கு அம்மை இதுவரை 31,600 பேருக்குத் தொற்றியுள்ளது. 12 பேர் அதனால் உயிரிழந்துள்ளனர். (அ)

# பிரான்ஸின் கோர்சிகா தீவை கடும் புயல் மழை தாக்கியது

## 6 பேர் பலி! பலர் காயம்!!

பாரிஸ், ஓக. 20

மத்தியதரைக் கடலில் லா கோர்ஸ் அல்லது கோர்சிகா என்று அழைக்கப்படுகின்ற பிரான்ஸின் கடல்கடந்த நிர்வாகத் தீவைக் கடுமையான புயல் மழை தாக்கியிருக்கிறது. அதனால் அங்கு பரவலாக சேதங்கள் ஏற்பட்டுள்ளன. குறைந்தது ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ஒருடசினுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 13 வயதுச் சிறுமியும் 72 வயதுப் பெண்ணும் அடங்குகின்றனர். மணிக்கு 225 கிலோமீற்றர்கள் வேகத்தில் வீசிய பயங்க ரக் காற்றினால் மரங்கள் முறிந்ததினாலும் கூரைகள் பிய்த்தெறியப்பட்டதாலுமே உயிரிழப்புகளும் காயங்களும் நேர்ந்துள்ளன. 45 ஆயிரம் வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப் பட்டிருக்கிறது.



நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை முதல் ஆரம்பித்த இடி மின்னல் மழை வெள்ளம் மற்றும் புயல் கோர்சிகாவின் மேற்கே இரண்டு மாவட்டங்களை மூர்க்கமாகத் தாக்கியுள்ளது. தொடர்ந்து இரவும் நாளை வெள்ளிக்கிழமையும் புயல் நீடிக்கலாம் என்பதால் பிரான்ஸின் வானிலை மையம் அங்கு செம்மஞ்சள் எச்சரிக்கையை நீடித்துள்ளது.

முந்நூறுக்கு மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோடை விடுமுறைக்காக கோர்சிகா தீவின் கடற்கரைகளை நிறைத்திருந்த உல்லாசப் பயணிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். கடலில் நீச்சல் மற்றும் படகுப் பயணங்களை மேற்கொண்டிருந்தவர்களும் அவசர அவசரமாக மீட்கப்பட்டிருக்கின்றனர்.

மீட்புப் பணிகள், சேத மதிப்பீடு மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்காக நெருக்கடிகால சேவைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக பிரதமர் எலிசபெத் போர்ன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மத்தியதரைக் கடலில் உருவான வெப்ப அனர்த்தம் தற்சமயம் பிரான்ஸின் தெற்குப் பகுதிகளில் கடும் புயல் மழை வெள்ள அனர்த்தங்களை ஏற்படுத்தியுள் ளது. பல இடங்களில் கடுமையான ஆலங் கட்டி மழைப் பொழிவும் ஏற்பட்டுள்ளது. (அ)



## சின்சினாட்டி ரென்னிஸ் நடால் அதிர்ச்சி தோல்வி!

*சின்சினாட்டி, ஓக. 20*

சின்சினாட்டி ரென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் நட்சத்திர வீரர் ரபேல் நடால் 2ஆவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.

போட்டித் தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருந்த அவர் நேரடியாக 2-ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்த நிலையில், குரோஷியாவின் இளம் வீரர் போர்னா கோரிச்சிடம் 6-7 (9/11), 6-4, 3-6 என்ற செற்களில் தோல்வியைத் தழுவினார்.

உலகின் 3ஆவது நிலை வீரரான நடால் கடைசியாக ஜூலையில் விம்பிள்டனில் களம் கண்டிருந்தார். வயிற்றில் காயம் காரணமாக அந்தப் போட்டியின் அரையிறுதிச் சுற்றிலிருந்து விலகிய அவர், காயத்துக்காக 6 வாரங்கள் சிகிச்சை மற்றும் ஓய்வை நிறைவு செய்து விளையாடிய முதல் போட்டி இது. அடுத்ததாக கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பனில் நடால் பங்கேற்க இருக்கிறார். (ஐ)

# சிம்பாவேயுடனான போட்டி இந்திய அணி இலகு வெற்றி!

*ஹராரா, ஓக. 20*

சிம்பாவே அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி 10 விக்கெட்களால் வெற்றி பெற்றுள்ளது.

தொடக்க வீரர்களான ஷுப்மன் கில் மற்றும் ஷிகர் தவான் இணையர் 192 ஓட்டங்களுக்கு வெற்றி கூட்டணி அமைத்தனர்.

இந்திய கிரிக்கெட் அணி சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளது. அங்கு, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது.

இந்திய அணிக்கு கில் மற்றும் தவான் தொடக்கம் கொடுத்தனர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 192 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் ஏற்படுத்தினர். இதன் மூலம் 30.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டி இந்திய அணி சுலபமாக வெற்றி பெற்றது. கில், 72 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்திருந்தார். தவான், 113 பந்துகளில் 81 ஓட்டங்கள் எடுத்தார்.

முன்னதாக, இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, களத்தடுப்பைத் தெரிவு



செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 40.3 ஓவர்களில் 189 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

ரெஜிஸ் சகாப்வா, பிராட் எவன்ஸ், ரிச்சர்ட் போன்ற வீரர்கள் 30 ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருந்தனர்.

110 ரன்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது அந்த அணி. பிராட் எவன்ஸ் மற்றும் ரிச்சர்ட்டும் இணைந்து 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதன் மூலம் அந்த அணி ஓரளவுக்கு போராடக் கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

இந்திய அணி சார்பில் பல மாதங்களுக்கு பிறகு அணிக்குள் திரும்பிய தீபக் சாஹர், பிரசித் கிருஷ்ணா மற்றும் அக்சர் பட்டேல் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றி இருந்தனர்.

சிராஜ், ஒரு விக்கெட் வீழ்த்தி இருந்தார். தீபக் சாஹர், குல்தீப் மற்றும் அக்சர் பட்டேல் போன்ற பந்துவீச்சாளர் மிகவும் சிக்கனமாக ஓட்டங்களை கொடுத்திருந்தனர். (ஐ)

# சுருண்டது இங்கிலாந்து அணி! தென்னாபிரிக்கா ஆதிக்கம்!!



*லண்டன், ஓக. 20*

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் 2ஆம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா 7 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது தென்னாபிரிக்கா. முதல் டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸில் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அந்த அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசி இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை தடுமாறச் செய்தார்கள். போப் மட்டும் போராடி ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

மழையால் முதல் நாளன்று 32 ஓவர்கள் மட்டுமே வீச முடிந்தது. இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

தொடர்ந்து இரண்டாம் நாள் ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசினர். இங்கிலாந்து அணி, 45 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. போப் அதிகபட்சமாக 73 ஓட்டங்கள் எடுத்து ரபாடா பந்தில் போல்ட் ஆனார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சாளர்களில் ரபாடா 5 விக்கெட்களும் நோர்ட்ஜே 3 விக்கெட்களும் யான்சென் 2 விக்கெட்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க அணிக்கு வலுவான தொடக்கம் கிடைத்தது. முதல் விக்கெட்டுக்கு எல்கரும் எர்வீயும் 85 ஓட்டங்கள் சேர்த்தார்கள். எர்வீ 73 ஓட்டங்களிலும் எல்கர் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார்கள்.

மஹாராஜ் 41 ஓட்டங்களும் மார்கோ யான்சென் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களும் எடுத்து அணிக்குக் கூடுதல் ஓட்டங்கள் சேர்த்தார்கள். 2ஆம் நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 77 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்தது.

3 விக்கெட்கள் மீதமுள்ள நிலையில் 124 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.



## சின்சினாட்டி ஓப்பன் எம்மா அதிர்ச்சி தோல்வி!

*சின்சினாட்டி, ஓக. 20*

சின்சினாட்டி ஓப்பன் ரென் னிஸ் போட்டியில் பிரிட்டனின் எம்மா ரடுகானு அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

சின்சினாட்டி ஓபன் சர்வ தேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடக்கின்றது.

இதில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த நான்காவது சுற்றில் இங்கிலாந்து இளம் வீராங்கனை எம்மா ரடுகானு, அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்தப் போட்டியில் 7-5 ,6-4 என்ற செற் கணக்கில் ஜெசிகா பெகுலா வெற்றி பெற்றார். இதனால் எம்மா ரடுகானு சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலிருந்து வெளியேறினார். (ஐ)

# முதல் தோல்வி கண்டது நியூசிலாந்து அணி

*பார்படோஸ், ஓக. 20*

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பார்படோஸில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 45.2 ஓவர்களில் 190 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 34, மைக்கல் பிரேஸ்வெல் 31 ஓட்டங்கள் சேர்த்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் அகேல் ஹொசைன், அல்ஸாரி ஜோசப் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

191 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடி மேற்கிந்தியத் தீவுகள் அணியானது 39 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஷமர்ப்ரூக்ஸ் 91 பந்துகளில், 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 79 ஓட்டங்களும் அணித்தலைவர் நிக்கோலஸ் பூரண் 28 ஓட்டங்களும் சேர்த்தனர். இந்த இணை 4ஆவது விக்கெட்டுக்கு 72 ஓட்டங்கள் சேர்த்து அணியின் வெற்றியில் முக்கிய பங்குவகித்தது.

5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்த ஆண்டில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணிசந்தித்த முதல் தோல்வி இதுவாகும்.



இதேவேளையில் இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக அடைந்த 9 தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

# ஜனாதிபதி ரணிலால் மட்டும் நாட்டை மீட்டெடுக்க முடியாது

## கூறுகின்றார் பாலித தெவரப்பெரும

**கொழும்பு, ஓக. 20**

**பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவினால் மட்டும் மீட்டெடுக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.**

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், ஒரு குருவி தனியாக வலையில் சிக்குண்டால் அதனால் எதுவும் செய்துக் கொள்ள முடியாது.

ஆனால் ஒரு குருவிக் கூட்டமே வலையில் சிக்குண்டால் அந்த வலையையும் சுமந்துக் கொண்டு அந்தக் கூட்டத்தால் பயணிக்க முடியும். இந்த நிலையில்தான் இன்று அரசாங்கம் உள்ளது.

இந்த நாட்டை முன்னேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டும் தனியாக முடியாது. சஜித் பிரேமதாஸவால் ஒருபோதும் நாட்டை மீட்க முடியாது.

நான் இந்நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும் என்ற கருத்துடன் நீண்ட காலமாக இருந்தவன்.

ரணில் விக்கிரமசிங்கவை அன்று எதிர்த்த தரப்பினர் கூட, இன்று அமைச்சுப் பதவிகளுக்காக அவரின் முன்பாக மண்டியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். - என்றார். (அ)

# இலங்கையில் சகல தேர்தல்களிலும் வாக்களித்துள்ள 107 வயது முதியவர்!

கொழும்பு, ஓக. 20

வந்துரம்ப, லைல்வல பகுதியிலுள்ள 107 வயதான முதியவர் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

அல்பர்ட் அபேகுணவர்தன என்ற அந்த முதியவர் கடந்த 17ஆம் திகதி 107 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்.

அவர் 1915 அன்று வந்துரம்பவில் பிறந்தார். தச்சுவேலை மற்றும் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட அவர், ஒரு காலத்தில் "கார்பெண்டர்" என்ற பெயரில் கிராம மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்.

லீலாவதி விஜேகுணவர்தனவை 1942 இல் திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதியருக்கு 11 பிள்ளைகள் உள்ளனர். 70 பேரப்பிள்ளைகள் மற்றும் மூன்று கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர்.

அல்பர்ட் மற்றும் லீலாவதி ஆகியோர் தங்கள் இளைய மகனின் குடும்ப உறுப்பினர்களுடன் வந்துரம்ப லைல்வாலாவில் உள்ள குடும்ப வீட்டில் வசிக்கின்றனர்.




இலங்கை வரலாற்றில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வாக்குகளைப் பயன்படுத்தியதாக, அல்பர்ட் அபேகுணவர்தன கூறுகிறார்.

கிராமத்தில் விளையும் பயிர்களையே உணவாகப் பயன்படுத்துவதால், தனக்கு நீண்ட கால நோய்கள் எதுவும் இல்லை என்றும் அவர் கூறுகிறார்.

சொந்த ஊரை விட்டு பிரிந்து வாழ விரும்பவில்லை. பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாடுகளுக்கு செல்வதை விரும்புவதில்லை. தனது மனைவியுடன் தனது சொந்த வீட்டில் வாழ்வதே அவரது நோக்கமாக இருந்ததாக அவரது பிள்ளைகள் கூறுகின்றனர்.

அல்பர்ட்டின் மனைவி லீலாவதிக்கு வயது 97. இந்த தம்பதியினர் வந்துரம்ப மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் வயதான தம்பதிகள் என்றும் உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# முழங்காவில் வைத்தியசாலைக்கு மருந்து பொருள்கள் வழங்கி உதவி

வடமராட்சி, ஓக. 20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கு ரூபா 540430 பெறுமதியான மருந்துப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்ட மருந்துப் பொருள்களின் பற்றாக் குறையை கருத்தில் கொண்டு குறித்த மருத்துவமனை அத்தியட்சகரான மருத்துவர் க. செல்வநாதனிடம் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கியதுடன் சந்நிதியான் ஆச்சிரம் தொண்டர்களும் கலந்து கொண்டனர். (அ)



# எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

கொழும்பு, ஓக. 20

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பற்றாக் குறையை எதிர்நோக்கியுள்ளதாக தொழிற்சங்கவாதி ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

நிலவும் தட்டுப்பாடு காரணமாக எரிபொருளைப் பெறுவதற்காக வாகனங்கள் இரண்டு அல்லது மூன்று நிரப்பு நிலையங்களுக்குச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போதியளவு எரிபொருள் இருப்பதாக கூறும் அமைச்சர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கூற்றுக்களை அவர் நிராகரித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டில் மக்களின் பயணத்தை குறைப்பதன் மூலம் எரிபொருள் இருப்பு கட்டுப்படுத்தப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்



### இரத்தினம் கோபாலகிருஸ்ணன் (ஆசன்)

**தோற்றம்** 02 - 02 - 1939

**மறைவு** 17 - 08 - 2022

யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், சாவகச்சேரி, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கோபாலகிருஸ்னன் அவர்கள் 17.08.2022 புதன்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினம், அழகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம், அன்னலச்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவனேஸ்வரி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும், வனுஷ்யா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஸ்ஜா (கட்டார்), பிரியா (அவுஸ்திரேலியா), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயராஜ், அகிலேஸ்வரன், திருஞானசம்பந்தர், முகுந்தன், நிறஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரன்ராஜ், பிரிவின்ராஜ், மாதேஷ், விபித்திரா, ஜீவித்தா, நிதுக்சன், அனிஷ், கிரிஷ், கசிக்கா, அக்சிகா, டக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூபதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, சிவராணி, சிவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.08.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று Corner and Roads, Delhi Rd & Plassey Rd, North Ryde NSW 2113, Australia நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :

**சிவனேஸ்வரி (வனிதா, மனைவி)** – 0061410771055
**பிரிவின்ராஜ் (பேரன்)** – 00447917370023
**அகிலேஸ்வரன் (மருமகன்)** – 00447944911230
**திருஞானசம்பந்தர் (மருமகன்)** – 0097455547952
**முகுந்தன் (மருமகன்)** – 0061402069165
**கோபிராஜ் (மகன்)** – 00447465987533

# வன்முறை நடந்தால் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்துவிட்டதாகவே பொருள்!

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஓக. 20**
**தங்களின் கொள்கையை முன்னிலைப்படுத்தி வன்முறையில் ஒரு தரப்பினர் ஈடுபடுவார்களாயின் அந்நாட்டில் என்றும் தேசிய பாதுகாப்பு பலமானதாக இருக்காது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடை பெற்ற நிகழ்வவொன்றில் உரை யாற்றிய அவர், எனது அரசியல் காலத்தில் இதுவரை அமைச்சர்களுக்கான வாசஸ்தலத்தில் நான் வாழ்ந்ததில்லை. வீட்டுக்கான வாடகையைக் கூட அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டதில்லை.

இந்த நிலையில் எனக்கு அரசமைப்பின் 14 (C) சரத்து இல்லாமல் செய்யப்பட்டது. விரும்பிய நேரத்தல் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை இலங்கை பிரஜை யாகிய எனக்கு இல்லாமல் செய்யப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் எனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியைக் கூட இதுவரை பயன்படுத்தியது கிடையாது.

மேலும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் தனது சொந்த வீட்டில் வசிக்க முடியாதுபோனால் அந்த நாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

இலங்கை மட்டுமன்றி உலக வரலாற்றிலேயே முதன்முறையாக மக்கள் பிரதிநிதியொருவர் மிகவும் கொடூரமான முறையில், வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். 12 மணிநேரத் திற்குள் 72 மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவமானது உலக பாராளுமன்ற வரலாற்றிலேயே கரும்புள்ளி- என்றார்.

# ரணிலுடன் மீண்டும் பேச்சு நடத்தத் தயார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஓக். 20
"பயனளிக்கும் மறுசீரமைப்பு செயல்பாடு மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மீண்டும் பேச்சு நடத்த நான் தயாராக உள்ளேன்", - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மறுசீரமைப்புகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் விசேட கூட்டம் நேற்று எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றபோதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோக ரீதியாக தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும். அரசு கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத்திட்டம் வடிவமைக்கப்படும்.

ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன். அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலர்களை அழிக்கும் செயல்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்கப்போவதில்லை. தற்போது அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பப் பதவிகள் அவசியமில்லை" - என்றார். (ஐ)

## இலங்கைக்கு...

துள்ளார்.

நாட்டின் வீழ்ச்சிக்கு முதல் காரணம், சட்டத்தின் ஆட்சியில் படிப்படியாக இடம்பெற்ற வீழ்ச்சியும் அரசியல் தலைவர்கள் நீதித்துறையில் தலையிட்டமையுமாகும். இதனால் நீதி என்பது எங்கள் மக்களுக்கு சாத்தியமில்லாத விடயமாக மாறியுள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டும்.

இரண்டாவது, எங்கள் அரசியல் அமைப்பில் ஊழல் என்பது அதிகமாக உள்ளது. ஒரு சிலர் அல்லது சில குடும்பங்கள் முடிவற்றவிதத்தில் பணம் உழைக்கின்றனர் சம்பாதிக்கின்றனர். இதேவேளை பல குடும்பங்கள் வறுமையில் சிக்குண்டுள்ளன. ஆகவே, இந்த ஊழல் நிறுத்தப்படவேண்டும். அதனை நிறுத்துவதற்கான வலுவான முறைமையை உருவாக்கவேண்டும்.

மூன்றாவது, மனித உரிமைகள் மீறல்கள் அதிகரிக்கின்றன. மக்கள் எவ்வளவு தூரம் எதிர்க்கின்றார்களோ, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றார்களோ, அரசாங்கங்கள் அவ்வளவுக்கு அதிகளவு ஒடுக்குமுறை மிகுந்தவையாக மாறியுள்ளன.

இலங்கை அரசாங்கம் இந்த தவறுகளை சரிசெய்யவேண்டும் என சர்வதேச சமூகம் அழுத்தங்களை கொடுக்கவேண்டும். தொடர்ந்தும் ஊழல் இடம்பெறாத விதத்தில் உதவிகளை வழங்கவேண்டும். நாடு எதிர்கொண்டுள்ள பிரச்னை மிகப் பெரியது. தவறான கொள்கைகளும் தவறான நிர்வாகமுமே இதற்கு காரணம்.

முன்னைய அரசாங்கம் ஊக்குவித்த பயனற்ற திட்டங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பெரும்கடனை செலுத்தவேண்டியுள்ளது. இந்த திட்டங்கள் மக்களின் அபிவிருத்திக்கு பதில் தனிப்பட்ட நபர்களுக்கு உதவியுள்ளன - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பல்கலை....

தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத ஆனால், வேறு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டாலும், இனிவரும் நாட்களில் அதன் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுள்ளது. (ஐ)

## ஐ. எம். எவ்வுட...

சர்வதேச நாணய நிதியத்தின் குழு இந்த மாத இறுதியில் இலங்கை வருகிறது. இந்நிலையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஊழியர் மட்டத்திலான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கான நோக்கத்துடனேயே இந்தக் குழு இலங்கை வருகிறது. இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டதும், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எமது வெளி கடனாளிகளை ஆலோசகர்களுடன் நாம் அணுக முயல்வோம் என்று நேற்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டு கடனை மறுசீரமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனால், கடன் மறுசீரமைப்பு செயல்முறையை வெளிநாட்டு கடனுடன் மட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மாறாமல் உள்ளது.

இதனிடையே, செப்ரெம்பரில் மொத்த பணவீக்கம் 65 சதவீதம் அல்லது அதற்கு குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது முன்னர், 70சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. உற்பத்தி செலவு அதிகமாக இருப்பதற்கு பணவீக்கம் முக்கிய காரணம். இதனால் தான் பணவீக்கத்தை கட்டுப்படுத்த இறுக்கமான பணவியல் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். பணவீக்கம் குறைந்தவுடன் இயக்கச் சூழலில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம் - என்றும் கூறினார். (ஐ)

## ஐ. நா. சபையின்...

பிராந்தியத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பாங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் மஸ்னெக்யன் - கார், இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோரே யாழ். மாவட்ட செயலர் க. மகேசனை சந்தித்தனர்.

காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட டேவிட் மஸ்னெக்யன் - கார், "தற்போதைய பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரம் மற்றும் கடற்றொழிலுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து யாழ். மாவட்ட செயலரிடம் கேட்டறிந்தோம்", என்றார்.

கடந்த 16 ஆம் திகதி இலங்கை டேவிட் மஸ்னெக்யன் - கார் தொடர்ச்சியாக பல இடங்களுக்கும் சென்று பல தரப்பினரையும் சந்தித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. நா. மனித...

நபர்கள் மீதான தடை நீக்கத்துக்கும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மாநாட்டுக்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்த அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தீவிரமான ஆய்வின் பின்னரே தடை நீக்கப்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத அமர்வு நடக்கவுள்ளது. இலங்கையின் போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக கடுமையான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்று பல கட்சிகள், சிவில் அமைப்புகள் மனித உரிமைகள் ஆணையாளரை வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## ஜனாதிபதியை...

இந்த சந்திப்பு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் பதவியேற்றமையைத் தொடர்ந்து மரியாதை நிமித்தமாக இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரண, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என். ஆர். லமாஹேவாகே, இலங்கை கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் ஜெனரல் ரியர் அட்மிரல் அனுர ஏக்கநாயக்க ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்தனர்.

சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் அவர்கள் வழங்கிவைத்தனர். (ஐ)

## கோட்டா நாடு...

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அடுத்த வாரம் இலங்கை திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதியுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பாக இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரியிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## தேசியப்...

வுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக, வியத்மக அமைப்பை சேர்ந்தவரும் பெரமுனவின் தேசியப் பட்டியல் எம். பியுமான சீதா அரம்பேபொல தனது பதவியை துறக்கவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ஆகியோர் தற்போது பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவும் எம். பி. ஆனால், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதிகளின் எண்ணிக்கை 3ஆக உயரும். (ஐ)

## டெங்கு...

தாக்கத்துக்கு உள்ளாகினர். இதில், 2 ஆயிரத்து 387 பேர் யாழ்ப்பாணத்தில் மட்டும் அடையாளம் காணப்பட்டனர். கடந்த இரு ஆண்டுகளை விட இது அதிகரித்த அளவாகும்.

இந்த ஆண்டில் இதுவரையான காலத்தில் வடக்கு மாகாணத்தில் 8 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்த மரணங்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே நிகழ்ந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## வார இறுதி...

பகல் வேளைகளில் ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும், இரவு வேளைகளில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


இதேவேளை, மின்சார விநியோகத்திற்காக உரிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படாவிட்டால் 2027 ஆம் ஆண்டு வரை பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களில் மின்துண்டிப்பை மேற்கொள்ள நேரிடும் என்று இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரசாங்கம் மற்றும் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அந்த சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 05 - 1957



இறப்பு 12 - 08 - 2022

### கந்தையா தம்பிராசா (தனம்)

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Montreal வை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா அவர்கள் 12.08.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை சோபனம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியவதனா (வதனம்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், தமிழினி (கனடா), காலஞ்சென்ற தனரூபன், தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயேஸ்வரன் (கனடா), சசிகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, சண்முகலிங்கம், தர்மராசா, ஆயிலியராணி மற்றும் இலட்சுமணன் (செல்வராசா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தமயந்தி, நாகேஸ்வரி, தேவி, இராசமணி(சின்னமணி), காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,பிருத்திகா, உபாஷனா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

*பார்வைக்கு :* Saturday, 20 Aug 2022 5:00 PM - 9:00 PM
Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada
*கிரியை :* Sunday, 21 Aug 2022 11:00 AM - 4:00 PM
Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**செல்வராசா - சகோதரன்** Mobile : +94777245455
**சோபா - மகள்** Mobile : +15146599615
**ராசன் - மருமகன்** Mobile : +15148368593
**தாட்சா - மகள்** Mobile : +447590079755
**சசிகுமார் - மருமகன்** Mobile : +447801229843

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 - 05 - 1935



இறப்பு 12 - 08 - 2022

### கிட்ணபிள்ளை தியாகராசா

அச்சுவேலி வறணனைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga வை வதிவிடமாகவும் கொண்ட கிட்ணபிள்ளை தியாகராசா அவர்கள் 12.08.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்ணபிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உருத்திரசிங்கம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னம்மா அவர்களின் பாசமிகு கணவரும், கருணாகரன் (கண்ணன் – கனடா), கருணாவதி (கருணா– கனடா), கவிதா (பிரித்தானியா), கிருபாகரன் (ஈசன்– கனடா), அருட்செல்வி(செல்வி– அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பொன்னம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், சிதம்பரபிள்ளை, மகேஸ்வரி, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமேஸ்வரன், மணிவண்ணன், சுரேந்திரகுமார், சிவகாமினி, ரேணுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,நிதர்சன், ஹரிஸ், ஜெனனி, முகுந்தன், சேயோன், அபிசன், அனிஷ், அகிஷ், அபிராமி, மேனன், மகிலக்ஷ்மி, தஷ்மி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 20 Aug 2022 5:30 PM - 9:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*கிரியை :*
Sunday, 21 Aug 2022 9:00 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*தகனம் :*
Sunday, 21 Aug 2022 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கண்ணன் - மகன்**

தொடர்புகளுக்கு :
**கண்ணன் - மகன்** Mobile : +14168767151
**அப்பன் - மருமகன்** Mobile : +16476690542
**ஈஸ்வரன் - மருமகன்** Mobile : +14168394971

## காணவில்லை



தொண்டைமானாறு வல்லை ரோட்டில் வசிக்கும் குருமூர்த்தி மயில்வாகனம், வயது 74 உடைய இவர் ஆகஸ்ட் 17, புதன் கிழமையிலிருந்து (கடந்த 3 நாட்களாகக்) காணவில்லை. நீல நிற சாரம், நீல நிற பனியன் அணிந்திருந்தார். சுமார் 5 அடி 9 அங்குல உயரமும் பொது நிறமும் நரைத்த தலை மயிருமுடைய இவருக்கு உச்சியில் வழுக்கை உண்டு. அத்தோடு இவரின் கழுத்து சிறிது கூனலாக இருக்கும். இவரைப் பற்றிய தகவல் ஏதும் அறிந்தவர்கள் தயவு செய்து கீழே தரப்பட்டிருக்கும் தொலைபேசிகளுக்கு அழைத்து விபரங்களைத் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.
உற்றார்

தொடர்பு இலக்கம்:
0753998654
0774206585
0770780778

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 11 - 1952



இறப்பு 18 - 08 - 2022

### பொன்னுசாமி பழனிவேல் முருகதாஸ்

**(பிரபல தவில் வித்துவான், கலைஞான பாரதி, தமிழ் இசை செல்வன், தவில் இசை சுடர் ஒளி)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Melbourne ஐ வதிவிடமாகவும் கொண்ட பொன்னுசாமி பழனிவேல் முருகதாஸ் அவர்கள் 18.08.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பழனிவேல் (தவில் வித்துவான், யாழ்ப்பாணம்), தையலாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணேசரத்தினம் (பெரியகணேசு – தவில் வித்துவான், அளவெட்டி), இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும்,சந்திரவதனி அவர்களின் அன்புக் கணவரும், கார்த்தீபன், கனித்திரா, விதிர்லா, கஜேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகாம்புஜம், ராஜலட்சுமி, சண்முகானந்தம், காலஞ்சென்ற முருகபூபதி, வசந்தாதேவி, ரேணுகாதேவி, உமாதேவி, காலஞ்சென்ற சத்தியவதி, ரூபதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசூரியன், காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஜெகதீஸ்வரி, பூபாலன், ரவீந்திரன், ஜெயவதனி, பாலகுலேந்திரன், நவகுமாரன், தசகுமாரி(மதி), லதாங்கி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஆன்நிரோஸா, கேசவன், ஈழதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், Teejay, கயல், மித்ரா ஆகியோரின் செல்லத் தாத்தாவும் ஆவார்.

*பார்வைக்கு :*
Sunday, 21 Aug 2022 9:30 AM - 11:30 AM
Bunurong Memorial Park 790 Frankston - Dandenong Rd, Dandenong South VIC 3175, Australia

*கிரியை :*
Monday, 22 Aug 2022 10:30 AM - 1:30 PM
Bunurong Memorial Park 790 Frankston - Dandenong Rd, Dandenong South VIC 3175, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**கார்த்திக் - மகன்** Mobile : +61484572260
**வதனி - மனைவி** Mobile : +61423352466
**கேசவன் - மருமகன்** Mobile : +61428829845

## மரண அறிவித்தல்

### கணேசு இராஜதுரை

**பிறப்பு: 25.12.1951** **இறப்பு: 16.08.2022**



அல்வாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு இராஜதுரை அவர்கள் 16.08.2022 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணேசபிள்ளை, பரமேஸ்வரி (கோண்டாவில்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும், தேஜோமயன், நேமிஷா, அபிலாஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிலுஷா, சுதயூட்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிரா, தானியா, அர்ஜுனா ஆகியோரின் அன்புப் பேரனும், தவமலர் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான சிவயோகமலர், செல்விமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயக்குமார் (இலங்கை), சிவனேசன்(அவுஸ்திரேலியா), யமுனா, சந்திரபோஸ், சண்முகதாசன் (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கானம்ருதா (அவுஸ்திரேலியா), அலங்ருதா (அவுஸ்திரேலியா), அவனிபாஜனன்(அவுஸ்திரேலியா), கவின்ருதா (அவுஸ்திரேலியா), மகிழ்ருதா (அவுஸ்திரேலியா), றுக்மாங்கதன் (அவுஸ்திரேலியா), சஜிதன் (ஜேர்மனி), சகான் (ஜேர்மனி), பவித்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மாமாவும், கஜந்திகா, ஜெனிபர், ஜரோஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

*பார்வைக்கு :* Saturday, 20 Aug 2022 12:00 PM - 4:00 PM, Monday, 22 Aug 2022 6:00 AM - 7:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada
*கிரியை :* Monday, 22 Aug 2022 7:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada
*தகனம் :* Monday, 22 Aug 2022 9:00 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : **தேஜோமயன் - மகன்** Mobile : +14163192959
**சந்திரபோஸ் - சகலன்** Mobile : +14168447608, **யூட்சன் - மருமகன்** Mobile : +16477786717

தகவல்: **யூட்சன் - மருமகன்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து



7.15 மணி : கதைவழி அறமொழி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- படையப்பா
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்
05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தடைநீக்கம்



**இரவு**
07.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்-இலக்கியங்கள்



10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு